بسم الله الرحمن الرحيم      نحمده ونصلّي على رسوله الكريم      وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 18

ஆசிரியர் முஸஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ர:பீக் அஹ்மது

1 ஷவ்வால் 1437 ஹிஜ்ரி கமரி      7 வ:பா 1395 ஹிஜ்ரி ஷம்ஸி      7 ஜூலை 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து–லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இறைவன் هُدًى لِّلْمُتَّقِيْنَ (இது இறையச்சமுடையவர்களுக்கு நேர்வழியை வழங்கக்கூடியது) என்ற வசனத்தில் இந்த வாக்குறுதியை தந்துள்ளான். அதாவது அவனது வேதத்தின் மீதும் அவனது தூதர் மீதும் நம்பிக்கை கொள்பவர் மேலும் நேர்வழியை பெறுவதற்கு தகுதியுடையவராக இருப்பார். இறைவன் அவரது கண்களை திறப்பான் அவருடன் தான் உரையாடுகின்ற சிறப்பை வழங்குவான். பெரும் பெரும் அடையாளங்களை அவருக்கு காட்டுவான். எதுவரையென்றால், அவர் இந்த உலகிலேயே அவனை கண்டு கொள்வார். அதாவது, அவரது இறைவன் இருக்கின்றான் என்று முழுமையாக திருப்தியடைவார்.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

هُدًى لِّلْمُتَّقِيْنَ இது இறையச்சமுடையவர்களுக்கு நேர்வழியை வழங்கக் கூடியது) என்று கூறியதில் இறைவனின் நாட்டம் இதுவாகும். எல்லா வகையான அருள்களும் உதாரணமாக மனிதனின் உயிர், உடல் நலம், அறிவு, ஆற்றல், செல்வம் போன்றவற்றிலிருந்து எவையெல்லாம் அவனுக்கு வழங்கப்பட்டனவோ அவை தொடர்பாக மனிதன் தனது முயற்சியினால் مِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ (நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவு செய்து கொண்டிருப்பார்) என்ற எல்லை வரைதான் தனது உளத்தூய்மையை வெளிப்படுத்த முடியும். மனித ஆற்றல்கள் இதை விட அதிகமான சக்தியை கொண்டிருக்கவில்லை. ஆனால், திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொள்பவர்கள் مِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ (நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவு செய்து கொண்டிருப்பார்) என்ற எல்லை வரை தமது உண்மையை வெளிப்படுத்தும்போது هُدًى لِّلْمُتَّقِيْنَ (இது இறையச்சமுடையவர்களுக்கு நேர்வழியினை வழங்கக்கூடியது) என்ற வசனத்திற்கேற்ப அவர்களுக்கு இறைவனின் வாக்குறுதி இதுவாகும். அதாவது, இறைவன் இந்த வகையிலான இறை வணக்கங்களில் கூட அதன் முழுமை வரை அவரைக் கொண்டு சென்று விடுவான். முழுமை என்பது இதுவாகும். அதாவது, அவருக்கு இந்த தியாகத்தின் ஆற்றல் வழங்கப்படும். அப்போது அவர் திறந்த உள்ளத்துடன் எவையெல்லாம் அவருடையதாக இருந்தனவோ அது இறைவனுடையதாகும் என்பதைப் புரிந்து கொள்வார். எவற்றின் மூலமாக அவர் மனித இனத்திற்கு தொண்டு செய்தாரோ அந்தப் பொருள்கள் அவருடையதாக இருந்தன என்று ஒருபோதும் எவரையும் அவர் உணர வைக்க மாட்டார். உதாரணமாக, நன்மை செய்வதன் மூலமாகக் கூட மனிதன் சில நேரங்களில் தனது செல்வத்தை பிறருக்கு வழங்கியுள்ளான் என்பதை ஒருவர் உணரும்படி செய்து விடுகின்றான். ஆனால், இது குறைவான நிலையாகும். அவன் அந்தப் பொருளை தன்னுடையதாக கருதுவதனால்தான் பிறரை இவ்வாறு உணர வைப்பான். எனவே هُدًى لِّلْمُتَّقِيْنَ (இது இறையச்சமுடையவர்களுக்கு நேர்வழியினை வழங்கக்கூடியது) என்ற வசனத்திற்கேற்ப இறைவன் திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொள்பவருக்கு இந்தத் தகுதியிலிருந்து முன்னேற்றத்தை வழங்குவான். எதுவரையென்றால், அவர் தனது எல்லா பொருள்களையும் இறைவனது பொருள்களாகக் கருதுவார். (தான் செய்த உபகாரத்தை) பிறரை உணர வைக்கின்ற நோயும் கூட அவரது உள்ளத்திலிருந்து அகன்று விடும். மனித இனத்திற்காக அவரது உள்ளத்தில் ஒரு தாயிடம் இருக்கும் அனுதாப உணர்வு அவரிடம் உருவாகி விடும். இன்னும் கூறுவதாயின், இதை விட அதிகமாக அந்த உணர்வு இருக்கும். எந்தப் பொருளும் அவருக்குச் சொந்தமான பொருளாக இருக்காது. மாறாக, எல்லாமே இறைவனுடையதாகி விடும். அவர் உண்மையான உள்ளத்துடன் திருக்குர்ஆன் மீதும், ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் மீதும் ஈமான் கொள்ளும்போதுதான் இது நடக்கும். அது அல்லாமல் இது நடக்காது. திருக்குர்ஆனையும் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களையும் பின்பற்றாமல் காய்ந்து போன தவ்ஹீதை மட்டும் இரட்சிப்பிற்குக் காரணமாக ஆக்கிக் கொள்கின்ற அந்த மக்கள் எந்த அளவு வழிதவறி விட்டனர்? இன்னும் சொல்வதென்றால், அத்தகைய மக்கள் இறைவன் மீதும் உண்மையான நம்பிக்கை வைத்திருப்பவர்களாக இல்லை என்பதை நாம் பார்க்கும் விஷயங்கள் நிருபித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் முழுமையான தகுதி வரை முன்னேறிச் செல்வது ஒருபுறமிருக்கட்டும். உலகின் பேராசைகளிலிருந்தும் விருப்பங்களிலிருந்தும் விலகி அவர்கள் தூய்மையைப் பெற முடியாது. மனிதன் சுயமே தவ்ஹீதின் அருட்கொடையைப் பெற முடியும் என்ற விஷயமும் கூட முற்றிலும் தவறானதும், குருட்டுத்தனமான எண்ணமும் ஆகும். மாறாக, ஏகத்துவம் இறைவனது வார்த்தைகளின் மூலமாகவே கிடைக்கின்றது. எவர் அது தன்னிடமிருந்து கிடைக்கின்றது என்று கருதுகின்றாரோ அவர் இணை வைப்பதிலிருந்து விலகியவராக இல்லை. இவ்வாறே இறைவனின் வேதங்களின் மீது நம்பிக்கை கொள்வதைப் பொருத்த வரையில் மனிதனின் முயற்சி, மனிதன் இறையச்சத்தை மேற்கொண்டவாறு அவனது வேதத்தின் மீது நம்பிக்கை கொண்டு பொறுமையுடன் அதைப் பின்பற்றுவது என்ற அளவில் மட்டுமே இருக்கும். இதை விட அதிகமாக செய்வதற்கு மனிதனிடம் சக்தி இல்லை. ஆனால், இறைவன் هُدًى لِّلْمُتَّقِيْنَ (இது இறையச்சமுடையவர்களுக்கு நேர்வழியினை வழங்கக்கூடியது) என்ற வாக்குறுதியளித்துள்ளான். மேலும் நேர்வழியைப் பெறுவதற்கு தகுதியுடையவராக ஆகி விடுவார் என்று வாக்குறுதி அளித்துள்ளான். மேலும், இறைவன் அவரது கண்களைத் திறப்பான். தன்னுடன் உரையாடுகின்ற சிறப்பை அவருக்கு வழங்குவான்.☆ பெரும் பெரும் அடையாளங்களை அவருக்கு காட்டுவான். எதுவரையென்றால், அவர் இந்த உலகிலேயே அவனைக் கண்டு கொள்வார். அதாவது, அவரது இறைவன் இருக்கின்றான் என்று முழுமையாக திருப்தி அடைவார். நீ என் மீது முழுமையாக நம்பிக்கை கொண்டால் நான் உன் மீதும் இறங்குவேன் என்று இறைவனின் வார்த்தைகள் கூறுகின்றது. இந்த அடிப்படையில்தான் ஹஸ்ரத் இமாம் ஜா:பர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நான் எந்த அளவு கலப்பற்ற உள்ளத்துடனும் நேசத்துடனும் ஆர்வத்துடனும் இறைவனின் வார்த்தைகளைப் படித்தேன் என்றால், அவை இறை அறிவிப்பின் வடிவில் எனது நாவிலும் கூட வந்தன. ஆனால், வேதனை என்னவென்றால் இறைவனுடன் உரையாடுவது என்பது என்ன? எந்நிலையில் இறைவன் ஒருவருடன் பேசுகின்றான் என்று கூற முடியும்? என்ற இந்த விஷயத்தை மக்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், பெரும்பாலான அறிவற்ற மக்கள் ஷய்த்தான் மனதில் போடுகின்ற விஷயத்தைக் கூட இறைவனின் வார்த்தையாகக் கருத ஆரம்பித்து விடுகின்றனர். அவர்களுக்கு ஷய்த்தானின் இல்ஹாமிற்கும் ரஹ்மானின் இல்ஹாமிற்கும் இடையிலுள்ள வித்தியாசம் தெரியவில்லை. எனவே, நினைவில் கொள்ளுங்கள். ரஹ்மானின் இல்ஹாம் மற்றும் வஹியைப் பெறுவதற்கு முதலாவது நிபந்தனை, மனிதன் முழுக்க முழுக்க இறைவனுக்காக ஆகி விட வேண்டும் என்பதாகும். ஷய்த்தானின் எந்த பங்கும் அவனிடம் இருக்கக் கூடாது. ஏனென்றால், எங்கு மரணித்தவை இருக்குமோ அங்கு நாய்களும் கூட ஒன்று சேர்வது கண்டிப்பானதாகும். எனவேதான் அல்லாஹ் கூறுகின்றான்: هَلْ أُنَبِّئُكُمْ عَلٰى مَنْ تَنَزَّلُ الشَّيٰطِيْنُ تَنَزَّلُ عَلٰى كُلِّ أَفَّاكٍ أَثِيْمٍ ஷய்த்தான்கள் எவர்கள் மீது இறங்குகின்றனர் என்பதை நான் உங்களுக்கு தெரிவிக்கபடுமா? பொய்யுரைக்கும் ஒவ்வொரு பாவியின் மீது அவர்கள் இறங்குகின்றனர். (26:222-223)

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பிறகு ரமலான் மாதம் ஆரம்பமாகும் - இன்ஷா அல்லாஹ். பகல் நீளமானதாக இருப்பதால் இந்த நாட்களில் வெப்பம் அதிகமுள்ள நாடுகளில் நோன்புகள் மிகவும் கடினமானவையாக இருக்கும். ஆனால், அவ்வாறிருந்தும் பருவ வயதை அடைந்துள்ள உடல் நலமுள்ள ஒவ்வொருவர் மீதும் இது கடமையாக இருக்கின்றது. எனினும், சில நிலைமைகளில் நோன்புகள் வைப்பதில் சில சலுகைகள் செய்து தரப்பட்டுள்ளன.

இஸ்லாத்தின் அடிப்படை தூண்களுடன் தொடர்புள்ள விஷயங்களை அவர்கள் அறிந்து கொள்வது அவசியமானதாகும். இந்தக் காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். நெறி நீதி தீர்ப்பவராக அவரை அனுப்பியுள்ளான். அன்னார் இஸ்லாமிய போதனைகளை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு விவகாரத்திற்கும் அவர்கள் தீர்ப்பு கூற வேண்டியதிருந்தது. அன்னார் தீர்ப்பு கூறியுள்ளார்கள். ஒவ்வொரு விஷயத்திற்கும் தீர்வு காண வேண்டியதிருந்தது. அன்னார் அவ்வாறு தீர்வு கண்டுள்ளார்கள். எனவே, இவ்வகையில் இக்காலத்தில் நமது மார்க்க விஷயங்களுக்கான தீர்வை காண்பதற்கும் நமது அறிவை அதிகப்படுத்துவதற்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பக்கம் பார்க்க வேண்டியது அவசியமானதாகும். இந்தக் காலத்தில் ஷரீஅத்தின் கட்டளைகள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கட்டளை அல்லது கருத்து தான் நாம் கேட்கின்ற விஷயத்திற்கான மார்க்கத் தீர்வும், தீர்ப்புமாகும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

திருக்குர்ஆன், நபிமொழி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகள் மற்றும் வழிகாட்டல்களின் ஒளியில் அருளுக்குரிய ரமலானை துவக்குவது, ஸஹர் உணவு சாப்பிடுவது, நோன்பு திறப்பது, பயணி மற்றும் நோன்பாளிகள் நோன்பு வைப்பது, ரமலானில் செலுத்த வேண்டிய ஃபித்யா, நோன்பு வைப்பதற்கான வயது, தஹஜ்ஜுது தொழுகை மற்றும் தராவீஹ் தொழுகை தொடர்பாக எழுகின்ற பல்வேறு கேள்விகளுக்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறியுள்ள விளக்கமான பதில்கள்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்**
**3 ஜுன் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **3 இஹ்ஸான்** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُولُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ . الرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பிறகு ரமலான் மாதம் ஆரம்பமாகும் – இன்ஷா அல்லாஹ். பகல் நீளமானதாக இருப்பதால் இந்த நாட்களில் வெப்பம் அதிகமுள்ள நாடுகளில் நோன்புகள் மிகவும் கடினமானவையாக இருக்கும். ஆனால், அவ்வாறிருந்தும் பருவ வயதை அடைந்துள்ள உடல் நலமுள்ள ஒவ்வொருவர் மீதும் இது கடமையாக இருக்கின்றது. எனினும், சில நிலைமைகளில் நோன்புகள் வைப்பதில் சில சலுகைகள் செய்து தரப்பட்டுள்ளன. வெப்பமான நாடுகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு வேறு சில நிபந்தனைகள் உள்ளன. கடினமான நிலைமைகளில் அவர்களால் நோன்பு வைக்க முடியவில்லை என்றால் அதற்கான வசதி செய்து தரப்பட்டிருக்கின்றது. இவ்வாறே சில நாடுகளில் இப்போது 22 அல்லது 23 மணி நேரம் பகலாக இருக்கின்றது. ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரம் தான் இரவாக இருக்கின்றது. அதுவும் கூட கும்மிருட்டாக இருப்பதில்லை. மாறாக, வெளிச்சம் இருந்து கொண்டிருக்கும் அல்லது சற்று பிரகாசம் உள்ள நேரமாக அது இருக்கின்றது. எனவே, அங்குள்ள ஜமாஅத்துகளுக்கு நேரத்தைக் கணித்தவாறு அதற்கேற்ப அவர்கள் ஸஹர் செய்கின்ற மற்றும் நோன்பு திறக்கின்ற நேரங்களை நிர்ணயம் செய்து கொள்ளுமாறு கூறப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட பெரும்பாலான இடங்களில் அருகிலுள்ள நாடுகளின் நேரங்களைச் சார்ந்திருந்தவாறு அல்லது அவர்களின் நேரங்களைக் கணித்தவாறு ஏறக்குறைய 18 அல்லது 19 மணி நேரம் இன்றைய நாட்களில் நோன்பு வைக்கின்ற நேரம் இருக்கும். இந்த நாடுகளில் இவ்வாறு செய்யாமல் இருந்தால் ஸஹர் செய்வதற்கும் நோன்பு திறப்பதற்கும் நேரமே இருக்காது. தஹஜ்ஜுத்தும் தொழ முடியாது. இஷா மற்றும் ஃபஜ்ர் தொழுகைக்கான நேரத்தை நிர்ணயம் செய்ய முடியாது. எந்நிலையிலும் இந்தப் பகுதியிலுள்ள ஜமாஅத்துகள் இதற்கேற்ப தங்களது நேரங்களை சரிசெய்து கொள்ள வேண்டும்.

நோன்பு இஸ்லாத்தின் அடிப்படை தூண்களில் ஒன்றாகும். அதை நிறைவேற்ற வேண்டியது அவசியமானதாகும். நோன்புகள் தொடர்பாக சின்னச் சின்ன கேள்விகள் எழுப்பப்படுகின்றன. ஸஹர் செய்கின்ற நேரம் தொடர்பாகவும், நோன்பு திறக்கின்ற நேரம் தொடர்பாகவும், நோயாளி மற்றும் பயணி தொடர்பாகவும் பல கேள்விகள் கேட்கப்படுகின்றன. ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் அருள் இருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் இலட்சக்கணக்கில் மக்கள் ஜமாஅத்தில் இணைகின்றனர். முஸ்லிம்களின் பல்வேறு பிரிவுகளில் இருந்தும் மாற்று மதத்தைச் சார்ந்தவர்களும் ஜமாஅத்தில் இணைகின்றனர். முஸ்லிம்களின் பல்வேறு பிரிவுகளிலும் சில கட்டளைகள் தொடர்பாக பல்வேறு மார்க்கச் சட்டம் தொடர்பான பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. அந்த கருத்துக்களுடன் அவர்கள் ஜமாஅத்திற்கு வரும் போது சில விஷயங்கள் அவர்களிடம் அமைதியின்மையை ஏற்படுத்தி விடுகின்றது. சில விளக்கங்களைப் பெற அவர்கள் விரும்புகின்றனர். சில விபரங்களை அறிய அவர்கள் விரும்புகின்றனர் அல்லது சில கேள்விகளைக் கேட்கின்றனர். இவ்வாறே மாற்று மதத்திலிருந்து வருபவர்கள் முற்றிலும் சில விஷயங்களைப் பற்றிய அறிவு இல்லாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு அவற்றைப் பற்றி எதுவும் தெரியாது. அவர்கள் அப்போதுதான் கற்றுக் கொள்கின்றனர். எனவே, இஸ்லாத்தின் அடிப்படை தூண்களுடன் தொடர்புள்ள விஷயங்களை அவர்கள் அறிந்து கொள்வது அவசியமானதாகும். இந்தக் காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். நெறி நீதி தீர்ப்பவராக அவரை அனுப்பியுள்ளான். அன்னார் இஸ்லாமிய போதனைகளை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு விவகாரத்திற்கும் தீர்ப்பு கூற வேண்டியது இருந்தது. அன்னார் தீர்ப்பு கூறியுள்ளார்கள். ஒவ்வொரு விஷயத்திற்கும் தீர்வு காண வேண்டியதிருந்தது. அன்னார் அவ்வாறு தீர்வு கண்டுள்ளார்கள்.

எனவே, இவ்வகையில் இக்காலத்தில் நமது மார்க்க விஷயங்களுக்கான தீர்வை காண்பதற்கும் நமது அறிவை அதிகப்படுத்துவதற்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பக்கம் பார்க்க வேண்டியது அவசியமானதாகும். தற்காலத்தில் நோன்புகள் பற்றி கேள்விகள் கேட்கப் –படுகின்றன. சில கேள்விகளுக்கு பதிலும் அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவை தொடர்பாக என்ன கருத்து கொண்டிருந்தார்கள்? அவர்கள் அது தொடர்பாக என்ன கட்டளையிட்டிருந்தார்கள்? அது தொடர்பான அவர்களின் ஃபத்வா என்ன? என்பதைப் பற்றி நான் எடுத்துக் கூறுவேன். இந்தக் காலத்தில் ஷரீஅத்தின் கட்டளைகள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கட்டளை அல்லது கருத்து தான் நாம் கேட்கின்ற விஷயத்திற்கான மார்க்கத் தீர்வும், தீர்ப்புமாகும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எப்போதும் நினைவில் வைக்க வேண்டிய முதலாவது விஷயம், இஸ்லாத்தில் செயல்களுக்கான அடிப்படை இறையச்சத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, தக்வாவை கண் முன் நிறுத்தியவாறு நோன்புகள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்தக் கட்டளையை உங்கள் முன்னால் வைத்திருங்கள். “உங்கள் நோன்புகளை இறைவனுக்காக உண்மையுடன் நிறைவேற்றுங்கள்” என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

(கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19, பக்கம் 15)

சிலர் ரமலான் தொடர்பான கேள்விகளைக் கேட்கின்றனர். பல சிறுவர்களும் கேட்கின்றனர். அதாவது, அஹ்மதி அல்லாதவர்களுக்கு மாற்றமாகத்தான் நாம் நோன்பு நோற்பது அல்லது பெருநாள் கொண்டாடுவதை ஆரம்பிக்கின்றோமா என்று கேட்கின்றனர். முதலாவதாக, அப்படி எந்தவோர் அடிப்படை வழிமுறையும் கிடையாது. கண்டிப்பாக நோன்பு நோற்க ஆரம்பிப்பது அல்லது பெருநாள் கொண்டாடும் இவ்விஷயத்தில் அவர்களுக்கு மாற்றமாகத்தான் நாம் செயல்பட வேண்டும் என்பதல்ல. பல வருடங்கள் இவ்வாறு வந்துள்ளன; வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் நாமும் அஹ்மதி அல்லாதவர்களும் நோன்பு நோற்பதும் பெருநாள் கொண்டாடுவதும் ஒரே நாளில் நடந்திருக்கின்றது. பாகிஸ்தானிலும் ஏனைய முஸ்லிம் நாடுகளிலும் எங்கு பிறை பார்க்கும் கமிட்டிகள் அரசாங்கத்தின் தரப்பிலிருந்தும் நியமிக்கப்பட்டிருந்ததோ அந்தக் கமிட்டி பிறை தென்பட்டு விட்டது. அதற்கான சாட்சிகள் இருக்கின்றது என்று அறிவிக்கும் போது அஹ்மதி முஸ்லிம்களாகிய நாம் அந்த அறிவிப்பிற்கேற்ப நோன்பு

வைத்துள்ளோம். அதற்கேற்பவே நமது நோன்புகளும் முடிவடைகின்றன. பெருநாளும் அதற்கேற்பவே கொண்டாடியிருக்கின்றோம். இந்த மேற்கத்திய நாடுகளில் ஐரோப்பிய நாடுகளில் அரசாங்கத்தின் தரப்பிலிருந்தும் பிறை பார்ப்பதற்கான ஏற்பாடும் இல்லை. இதற்கான அதிகாரப்பூர்வமான அறிவிப்பும் செய்யப்படுவதில்லை. எனவே, பிறை தென்படுவதற்கான தெளிவான சாத்தியக்கூறை நாம் கண்முன் நிறுத்தியவாறு நோன்பு வைக்க ஆரம்பிக்கின்றோம். பெருநாள் கொண்டாடுகிறோம் என்றாலும் எங்களது கணிப்பு தவறாக இருந்து பிறை முன்னதாகவே தென்பட்டிருந்தால் பிறகு அறிவுள்ள மற்றும் பருவ வயதை அடைந்துள்ள மக்களது சாட்சியத்துடன், பிறையை நாங்கள் பார்த்தோம் என்ற நம்பிக்கை கொண்டவர்கள் சாட்சி பகர்வதை முன் வைத்து முன்னதாகவே நோன்பு நோற்க ஆரம்பிக்கலாம். ஒரு விளக்கப்படம் தயாராகி இருப்பதால் அதற்கேற்பதான் ரமலான் ஆரம்பமாக வேண்டும் என்பது கண்டிப்பானதல்ல. ஆனால், அஹ்மதி அல்லாதவர்களின் அறிவிப்பிற்கேற்ப பிறையை பார்க்காமலேயே நாம் நோன்பு வைக்க ஆரம்பித்து விட வேண்டும் அல்லது பெருநாளைக் கொண்டாட வேண்டும் என்று கூறுவது தவறாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த விஷயம் பற்றி தமது நூலான 'சுர்மே சஷ்மே ஆரியா' –வில் கூறியுள்ளார்கள். கணக்கு வழக்கின் அடிப்படையில் பிறை தோன்றிய நாளை கணக்கிடுவது அல்லது கணிப்பதை அவர்கள் மறுத்துக் கூறவில்லை. இதுவும் ஒரு விஞ்ஞான அறிவாகும். ஆனால், பிறையைக் கண்களால் காண்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இறைவன் மார்க்கக் கட்டளைகளை எளிதாக்கும் நோக்கத்துடன் பொதுமக்களுக்கு தெளிவான நேரான வழியைக் கூறியுள்ளான். தேவையில்லாத சிரமங்களிலும் கோணலான விஷயங்களிலும் அவர்களை ஆழ்த்தவில்லை. நோன்பு வைப்பதற்காக வானசாஸ்திரங்களிலும் மற்றும் நட்சத்திரங்கள் தொடர்பாக அறிவின் விதிமுறைகளுக்கேற்ப 29 –வது பிறையா அல்லது 30 –வது பிறையா என்பதை தெரிந்து கொள்ளாத வரை பிறையைக் கண்ணால் கண்டதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பது சரியானதல்ல.''

அதாவது, விஞ்ஞானிகள் தரப்பிலிருந்தும் உருவாக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்ப விண்ணியல் பற்றிய அல்லது நட்சத்திரங்கள் பற்றிய அறிவை உடையவர்கள் என்ன விதிமுறைகளை உருவாக்கியுள்ளனரோ அந்த விதிமுறைகளைப் பேண வேண்டும் என்பது கண்டிப்பானதல்ல. அவர்களது கணிப்பிற்கேற்ப அவர்கள் இது 29 –வது நாளில் தோன்றிய பிறை அல்லது 30 –வது நாளில் தோன்றிய பிறை என்று கூறுகின்றனர் என்றால் அதற்கேற்ப செயல்பட்டவாறு பிறையைப் பார்க்க முயற்சி செய்யாமல் இருப்பதும், பிறையைக் கண்களால் கண்டதை நம்பாமல் மறுப்பதும் தவறாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இவ்வாறு பிறையைக் கண்டால் கண்டதை நம்பாமலும் கண்களை மூடிக் கொள்வதும் தேவையில்லாமல் நட்சத்திரங்கள் பற்றிய அறிவை உடையவர்களின் நுட்பமான அறிவை பொதுமக்களின் கழுத்தில் மாலையாகப் போடுவதும் தேவையில்லாமல் எவ்வித உரிமையுமின்றி ஒருவரை கஷ்டத்தில் ஆழ்த்துவதாகும். மேலும் ஒருவரது சக்திக்கு அப்பாற்பட்ட துன்பத்தில் அவரை ஆழ்த்துவதுமாகும்.''

அதாவது, கணிக்கப்பட்ட விஷயங்கள் எங்களுக்கு இதைத்தான் கூறுகின்றன. எனவே, இதைத் தவிர வேறு எதனையும் நாங்கள் செய்ய மாட்டோம் என்று கூறுவது தேவையில்லாமல் தம்மை சிரமத்தில் ஆழ்த்திக் கொள்வதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''அத்தகைய கணக்குகளில் கூட பல தவறுகளும் நிகழ்ந்துள்ளன என்பதும் வெளிப்படையாகத் தெரிய வந்திருக்கின்றது. எனவே, மிகவும் நேரான விஷயமும் பொதுமக்களின் நிலைமைக்கு ஏற்ற விஷயமும் என்னவென்றால், அம்மக்கள் விஞ்ஞானிகள், கோள்கள் மற்றும் நட்சத்திரத்தைப் பற்றிய அறிவுடையவர்களின் தேவையை உடையவர்களாக இருக்க வேண்டாம். பிறை எந்தத் தேதியில் வெளிப்பட்டது என்பதைத் தெரிவதற்கு தமது கண்களால் பிறையைக் காண்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.''

அறிவின் அடிப்படையில் மட்டும் பிறை தோன்றும் தேதி 30 –ஐக் கடந்து விடக் கூடாது என்பதை புரிந்து கொள்ளுங்கள். பிறையைப் பார்ப்பது அவசியமானதாகும். பிறையைப் பார்க்க முயற்சி செய்து அது தென்படாவிட்டால் பிறகு கணக்குகளின் அடிப்படையில் கணித்துக் கூறுவதைச் சார்ந்திருக்கலாம். ஆனால், 30 நாட்களுக்கு மேல் கடந்து செல்லாமல் பார்த்துக் கொள்ளும் வகையில் அவற்றைச் சார்ந்திருக்கலாம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''பிறையைக் கண்களால் காண்பதுதான் கணக்கிட்டு அதைக் கணிப்பதை விட சிறந்ததும் முதன்மையானதும் ஆகும் என்றே அறிவும் கூறுகின்றது..... இறுதியில் ஐரோப்பிய அறிஞர்களும் கூட கண்களால் பிறையைக் காண்பதும் பெரும்பாலும் நம்பத்தக்க ஒன்றாக இருக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்ட போது அவர்கள் தமது இந்த நல்லெண்ணத்தின் காரணமாக தமது பார்வையின் ஆற்றலைக் கொண்டு பல்வேறு கருவிகளையும் தொலைநோக்குக் கருவிகளையும் அவர்கள் கண்டுபிடித்தனர்.''

(சுர்மே சஷ்மே ஆரியா. ரூஹானி கஸாயின் தொகுதி 2, பக்கம் 192-193)

நான் ஏற்கனவே கூறியது போன்றே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று கணக்கிடுவதில் தவறும் சில நேரங்களில் ஏற்படுகின்றது. அவ்வாறு தவறு நிகழ்ந்து விட்டால் அதாவது பிறை ஒரு நாள் முன்னதாகவே தென்பட்டு விட்டது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டால் பிறகு என்ன செய்ய வேண்டும்? இதன் பொருள் ஒரு நோன்பு விடுபட்டு விட்டது. பிறை ஒரு நாள் முன்னதாகவே தென்பட்டு விட்டது. அவ்வாறு தென்பட்டது நிரூபணமாகி விட்டது என்றால் நாம் என்ன செய்ய வேண்டும்? இது தொடர்பாக ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கேள்வி கேட்கப்பட்டது. ஸியால்கோட்டிலிருந்து ஒரு நண்பர் இவ்வாறு கேட்டிருந்தார். இங்கு பிறை செவ்வாய்க்கிழமை அன்று தென்படவில்லை. மாறாக, புதன்கிழமை அன்று தான் பிறை தென்பட்டது. ஆனால், ரமலான் புதன்கிழமையிலிருந்து ஆரம்பமாகி விட்டது. பொதுவாக இந்தப் பகுதியில் எல்லா இடங்களிலும் முதல் நோன்பு வியாழக்கிழமைதான் வைக்கப்பட்டுள்ளது. நோன்பு புதன்கிழமை அன்றுதான் வைத்திருக்க வேண்டும். ஆனால், எங்கள் பகுதியில் வியாழனன்று முதல் நோன்பு வைத்திருக்கின்றனர். இப்போது என்ன செய்ய வேண்டும்? என்று அவர் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ''இதற்குப் பகரமாக அதாவது விடுபட்ட நோன்பிற்குப் பகரமாக ரமலான் மாதம் கழிந்த பிறகு ஒரு நோன்பு நோற்க வேண்டும்'' என்று கூறினார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 437; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது) விடுபட்ட நோன்பை ரமலானுக்குப் பிறகு நோற்க வேண்டும்.

இவ்வாறே சஹர் உணவு உண்பதைப் பற்றிய விஷயம் இருக்கின்றது. ஒரு ஹதீஸில் வருகின்றது. நோன்பு வைப்பவர் சஹர் உணவு உண்பது அவசியமானதாகும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நோன்பு நோற்கும் நாட்களில் சஹர் உணவு உண்ணுங்கள். ஏனென்றால், சஹர் உணவு சாப்பிட்டு விட்டு நோன்பு வைப்பதில் பரக்கத் இருக்கின்றது. (ஸஹீஹ் புகாரி கிதாபுஸ் ஸவ்ம் பாபு பரக்கத்திஸ் ஸுஹுரி ஹதீஸ் 1923) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தாமும் இதனைப் பேணி வந்தார்கள். அவ்வாறே ஜமாஅத் சகோதரர்களிடமும் சஹர் உணவு உண்ணுமாறு கூறி வந்தார்கள். இவ்வாறே விருந்தினர்களாக வெளியிலிருந்து காதியானுக்கு வருபவர்களுக்கும் முறையாக சஹர் உணவிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இன்னும் சொல்வதென்றால், இதற்காக பெரிய ஏற்பாடு இருந்தது.

இது தொடர்பாக ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ''கபூர்தலாவைச் சார்ந்த முன்ஷி ஸஃபர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுத்து மூலமாக எனக்கு இவ்வாறு தெரிவித்தார்கள். நான் காதியானில் மஸ்ஜிது முபாரக்கிற்கு ஒட்டியிருந்த ஓர் அறையில் தங்கியிருந்தேன். நான் ஒருமுறை சஹர் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அப்போது அங்கு வந்தார்கள். நான் சஹர் உணவு உண்பதைப் பார்த்து விட்டு ஹுஸூர் (அலை) அவர்கள், ''நீங்கள் ரொட்டியும் பருப்பும் சாப்பிடுகின்றீர்களா? என்று கேட்டார்கள். அவர் சஹர் நேரத்தில் ரொட்டியும் பருப்பும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஹுஸூர் (அலை) அவர்கள் அப்போதே அதற்கான ஏற்பாட்டைச் செய்பவரை அழைத்து சஹர் நேரத்தில் நண்பர்களுக்கு இத்தகைய உணவைக் கொடுக்கலாமா?'' என்று கேட்டார்கள். பிறகு கூறினார்கள்: ''இங்கு இப்போது இருக்கின்ற சகோதரர்கள் அனைவரும் பயணத்தில் இல்லை. அவர்கள் இங்கு தங்கியிருக்கின்றனர். நோன்பு வைத்துள்ளனர். அவர்கள் எதைச் சாப்பிடும் பழக்கமுள்ளவர்களாக இருக்கின்றனர்? அவர்கள் சஹர் நேரத்தில் எவற்றையெல்லாம் சாப்பிட விரும்புவர்? என்பதை அறிந்து அதே உணவுகளை அவர்களுக்கு தயார் செய்ய வேண்டும்.'' பிறகு இதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் வேறு உணவைக் கொண்டு வந்தார். ஆனால், நான் சாப்பிட்டு முடித்து விட்டேன். பாங்கும் கூறப்பட்டு விட்டது. அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள், ''சாப்பிடுங்கள். பாங்கு விரைவாகச் சொல்லப்பட்டு விட்டது. அதைக் கருத்தில் கொள்ள வேண்டாம்'' என்று கூறினார்கள். (ஸீரத்துல் மஹ்தி தொகுதி 2, நான்காம் பகுதி, பக்கம் 127 அறிவிப்பு எண்.1163)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையைத் தொழதது மற்றும் சஹர் சாப்பிட்டது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் தமது அறிவிப்பில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள். 1895 –ல் முழு ரமலானையும் காதியானில் கழிக்க நேர்ந்தது. நான், ஹஸ்ரத் சாஹிப் அவர்களுக்கு பின்னால் தஹஜ்ஜுது தொழுகையைத் தொழுதேன். அவர்கள் இரவின் முற்பகுதியில் வித்ர் தொழுகையைத் தொழுது வந்தார்கள். இரவின் இறுதிப் பகுதியில் இரண்டு இரண்டு ரக்அத்துகளாக மொத்தம் எட்டு ரக்அத்துகள் தஹஜ்ஜுது தொழுதார்கள். முதல் ரக்அத்தில் ஆயத்துல் குர்ஸி அதாவது அல்லாஹு லாயிலாஹா இல்லா ஹு –விலிருந்து வஹுவல் அலிய்யுல் அளீம் வரை ஓதினார்கள். இரண்டாவது ரக்அத்தில் சூரா இக்லாஸ் ஓதினார்கள். ருகூவிலும் ஸுஜூதிலும் பெரும்பாலும் யா ஹய்யு யா கய்யூம் பிரஹ்மதிக நஸ்தகீஸ் என்ற துஆவை ஓதினார்கள். அதை எப்படி ஓதி வந்தார்கள் என்றால் அவர்களது குரலை என்னால் கேட்க முடிந்தது. சஹர் உணவை தஹஜ்ஜுது தொழுகைக்குப் பிறகு அன்னார் சாப்பிட்டார்கள். அதை எந்த அளவு தாமதப்படுத்துவார்கள் என்றால் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே பாங்கு கொடுக்கப்பட்டு விடும். பாங்கு முடியும் வரை சாப்பிட்டுக் கொண்டே இருப்பார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘உண்மையில் விஷயம் என்னவென்றால், எதுவரை சுபுஹ்வின் ஆரம்ப நேரம் கிழக்கு அடி வானத்திலிருந்து வெளிப்படவில்லையோ அதுவரை சஹர் உணவு உண்பது ஆகுமானதாகும். பாங்குடன் அதற்கு எந்தத் தொடர்பும் இல்லை. ஃபஜ்ர் தொழுகையின் பாங்கு சுபுஹ்வின் ஆரம்ப நேரம் வெளிப்பட்டதும் கொடுக்கப்பட வேண்டும் என்றே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. சில இடங்களில் சஹர் உணவு உண்பதன் நேரம் பாங்கு சொல்லும் வரைதான் நீடிக்கும் என்று புரிந்து கொள்கின்றனர். காதியானில் சுபுஹ்வின் ஆரம்ப நேரம் வெளிப்பட்டதுமே பாங்கு கொடுக்கப்படுகின்றது. சில நேரங்களில் தவறுதலாகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளாமலும் இந்த நேரத்திற்கும் முன்னதாக பாங்கு கொடுக்கப்பட்டு விடுகின்றது. எனவே, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்விஷயத்தில் பாங்கு கூறப்படுவதைக் கருத்தில் கொள்வதில்லை.’’

விடியலின் (வெண்கதிர்கள்) வெளிப்படும் வரை சஹர் உணவு சாப்பிட்டு வந்தார்கள். கணக்கின் அடிப்படையிலும் அறிவின் அடிப்படையிலும் சுபுஹ்வின் ஆரம்ப நேரம் துவங்கியதும் உடனே உண்பதை விட்டு விட வேண்டும் என்பது ஷரீஅத்தின் நாட்டமல்ல. அதன் நாட்டம் என்னவென்றால், பொதுவாக மக்களின் பார்வையில் விடியலின் வெண்கதிர்கள் எப்போது தென்படுகின்றதோ அப்போது உண்பதை விட்டு விட வேண்டும். *தபய்யுன்* என்ற சொல் இந்த விஷயத்தைத்தான் தெளிவுபடுத்துகின்றது.

நபிமொழியிலும் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘பிலால் பாங்கு சொல்லும் போது சஹர் உணவு சாப்பிடுவதை விட்டு விடாதீர்கள். மாறாக, இப்னே மக்தூம் பாங்கு சொல்லும் வரை சாப்பிடுங்கள்; குடியுங்கள்.’’ ஏனென்றால், இப்னே மக்தூம் கண் பார்வையற்றவர் ஆவார். எனவே, எதுவரை மக்களிடமிருந்து சுபுஹ் நேரம் ஆரம்பமாகி விட்டது. சுபுஹ் நேரம் ஆரம்பமாகி விட்டது என்று கூச்சல் எழாதோ அதுவரை அவர்கள் பாங்கு சொல்ல மாட்டார்கள். (ஸீரத்துல் மஹ்தி தொகுதி 1, பாகம் 2, அறிவிப்பு எண்.320, பக்கம் 295-298) கடந்த வருடம் ஒரு நண்பரிடம் நீங்கள் அதிக நேரம் வரை சஹர் உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றீர்கள் என்று நான் கூறியிருந்தேன். இதைக் கேட்டு அவர் அந்த நோன்பை மீண்டும் வைத்தார். ஆனால், நான் இப்போது குறிப்பிட்ட இந்த நேரத்தையும் கடந்து செல்லாமல் அவர் இருந்திருந்தால் அவர் செய்தது சரிதான். ஒவ்வொருவரும் இதைப் பற்றி ஆய்வு செய்து பார்க்க முடியும். இங்கு பாங்கு சொல்லப்படுவதில்லை. சுபுஹ்வின் ஆரம்ப நேரத்தைப் பார்ப்பது அவசியமாகும். விடியல் வெளிப்படும் வரை அதன் வெண் கதிர்கள் தெரியும் வரை சஹர் உணவு உண்ணலாம்.

சஹர் நேரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தோம்பல் தொடர்பாக இன்னொரு முன்னுதாரணம் தெரிய வருகின்றது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

மர்ஹூம் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் அவர்களின் மனைவி காதியானிலுள்ள லஜ்னா இமாயில்லாஹ்விற்காக எழுத்துப்பூர்வமாக இந்த அறிவிப்பைச் செய்துள்ளார்கள். இது 1903 –ல் நடந்த சம்பவமாகும். நானும் மர்ஹூம் டாக்டர் சாஹிப் அவர்களும் ரூர்கியிலிருந்து காதியான் வந்திருந்தோம். நான்கு நாட்கள் விடுப்பு கிடைத்திருந்தது. ஹுஸூர் (லை) அவர்கள், பயணத்தில் நோன்பு நோற்கக் கூடாது தானே? என்று கேட்டார்கள். நாங்கள் பயணத்தில் நோன்பு வைக்கவில்லை. எனவே, நாங்கள் நோன்பு வைக்கவில்லை என்று கூறினோம். ஹுஸூர் அவர்கள் நாங்கள் தங்குவதற்கு ஓர் அறையை ஏற்பாடு செய்து தந்தார்கள். டாக்டர் சாஹிப், நாங்கள் நோன்பு வைப்போம் என்று கூறினார்கள். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் நல்லது என்று கூறினார்கள். டாக்டர் சாஹிப் அவர்கள், சில நாட்கள் நாங்கள் இங்கு தங்க வேண்டியதுள்ளது. உள்ளம் நோன்பு வைக்க விரும்புகின்றது என்று கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் நல்லது; நாம் உங்களுக்கு காஷ்மீர் பரோட்டா சாப்பிடக் கொடுப்போம் என்று கூறினார்கள். காஷ்மீர் பரோட்டா எப்படி இருக்குமோ? என்ற நாங்கள் நினைத்தோம். சஹர் உணவிற்கான நேரம் வந்ததும் நாங்கள் தஹஜ்ஜுது மற்றும் நஃபில் தொழுகைகளை தொழுது முடித்த பிறகு உணவு வந்ததும் ஹுஸூர் (அலை) அவர்கள் தாமே நாங்கள் இருந்த அறைக்கு வந்தார்கள். அது அந்த வீட்டின் கீழ்ப்பகுதியில் இருந்தது. மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் அதே வீட்டின் மூன்றாவது மாடியில் இருந்து வந்தார்கள். அவர்களது மூத்த மனைவியான கரீம் பீபி சாஹிபா அவர்களை மவ்லவியானி என்று நாங்கள் கூறி வந்தோம். அவர்கள் காஷ்மீரைச் சார்ந்தவர்களாவர். அவர்கள் நன்றாக பரோட்டா சமைப்பார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் எங்களுக்காக அவர்கள் மூலமாக பரோட்டோ தயார் செய்தார்கள். மேல் மாடியிலிருந்து சுடச்சுட பரோட்டா வந்து கொண்டிருந்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் அவற்றை தாமே கொண்டு வந்து எங்களுக்கு முன்னால் வைத்துக் கொண்டிருந்தார்கள். நன்றாக சாப்பிடுங்கள் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். எனக்கு வெட்கம் வந்தது. டாக்டர் சாஹிப் அவர்களும் வெட்கப்பட்டார்கள். ஹுஸூர் அவர்களின் பரிவையும் அன்பையும் கண்டு எங்களது உள்ளத்தில் மகிழ்ச்சி அலை மோதியது. இந்நிலையில் பாங்கு சொல்லப்பட்டது. ஹுஸூர் (அலை) அவர்கள், இன்னும் சாப்பிடுங்கள். இன்னும் அதிக நேரம் எஞ்சியிருக்கின்றது என்றும் கூறினார்கள்.

மேலும் கூறினார்கள்: திருக்குர்ஆனில் அல்லாஹ்,

كُلُوْا وَاشْرَبُوْا حَتّٰى يَتَبَيَّنَ لَكُمُ الْخَيْطُ الْاَبْيَضُ مِنَ الْخَيْطِ الْاَسْوَدِ مِنَ الْفَجْرِ

இருள் விலகி விடியலின் வெண் கதிர்கள் உங்களுக்கு தெரியும் வரை நீங்கள் உண்ணுங்கள்; குடியுங்கள் என்று கூறியுள்ளான். **(2:188)** இதற்கேற்ப மக்கள் செயல்படுவதில்லை. நீங்கள் சாப்பிடுங்கள். இன்னும் அதிக நேரம் எஞ்சியிருக்கின்றது. பாங்கு சொல்பவர் குறித்த நேரத்திற்கு முன்னதாகவே பாங்கு கொடுத்து விட்டார் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தவரை ஹுஸூர் (அலை) அவர்கள் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள். பிறகு இங்கும் அங்கும் உலாவிக் கொண்டிருந்தார்கள். டாக்டர் சாஹிப் அவர்கள் ‘‘ஹுஸூர் நீங்கள் அமருங்கள். நானே வேலை செய்யும் பெண்ணிடமிருந்து பரோட்டாக்களைப் பெற்றுக் கொள்வேன் அல்லது எனது மனைவி அவற்றை எடுத்து வருவார்கள்’’ என்று கூறினார்கள். ஆனால், ஹுஸூர் அவர்கள் அதை ஏற்கவில்லை. எங்களுக்காக விருந்தோம்பல் செய்வதில் ஈடுபட்டு வந்தார்கள். இந்த உணவில் குழம்பும் இருந்தது. பாலும், வேறு பல பொருட்களும் இருந்தன. (ஸீரத்துல் மஹ்தி தொகுதி 2, ஐந்தாம் பாகம், பக்கம் 202-203 அறிவிப்பு எண்.1320) நல்ல உணவை உண்ணுங்கள். ஆனால், அதிலும் நடுநிலையை பேண வேண்டும். நோன்பு வைத்திருக்கும்போது நாம் நோன்பு வைத்துள்ளோம். இனியும் நோன்பு வைக்க வேண்டியது இருக்கின்றது என்ற உணர்வும் இருக்க வேண்டும்.

இதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சான்று காட்டி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ‘‘அல்லாஹ் கூறுகின்றான் يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْر நீங்கள் நம்பிக்கை கொண்ட நிலையில் கஷ்டத்துடன் வாழ்வதை நம்மால் சகித்துக் கொள்ள முடியாது. இதனால்தான் நாம் நோன்பைக் கடமையாக்கியுள்ளோம். அதன் மூலம் உங்கள் கஷ்டங்கள் அகல வேண்டும். இது எத்தகைய விஷயம் என்றால், அது ஒரு நம்பிக்கை கொண்டவரை உண்மையில் நம்பிக்கை கொண்டவராக ஆக்குகின்றது. அந்த விஷயம் இதுவாகும். அதாவது நோன்பின்போது பசியாக இருப்பதும் மார்க்கத்திற்காக தியாகம் செய்வதும் மனிதனுக்கு எவ்விதத்திலும் அவனுக்கு இழப்பு ஏற்படக் காரணமாக இருக்காது. முழுக்க முழுக்க இது நற்பலன் கிடைப்பதற்கே காரணமாக இருக்கும். ரமலானில் பசியாக இருப்பதாக எவர் கருதுகின்றாரோ அவர் திருக்குர்ஆனை பொய்ப்படுத்துகின்றார். ஏனென்றால், அல்லாஹ் நீங்கள் பசியுடன் இருந்தீர்கள். நீங்கள் உணவு உண்ண வேண்டும் என்பதற்காக நாம் ரமலானை நியமித்தோம் என்று கூறுகின்றான். இதிலிருந்தும் இறைவன் சாப்பிட வைப்பதுதான் உணவு என்பது தெரிய வருகின்றது. உண்மையான வாழ்வு அவனிடமிருந்தே கிடைக்கின்றது. அவனை தவிர்த்து கிடைக்கின்ற உணவு உணவல்ல. அது அதனை சாப்பிடுபவரின் அழிவிற்குக் காரணமாகி விடுகின்ற கல்லாக இருக்கின்றது. நம்பிக்கை கொண்டவருக்கு அவரது வாயில் போடப்படும் உணவின் கவளம் யாருக்காக போடப்படுகின்றது? என்பதைப் பார்க்க வேண்டியது கடமையாகும். அது இறைவனுக்காக போடப்பட்டிருந்தால் அதுதான் உணவாகும். தனது நஃப்ஸிற்காக அது போடப்பட்டிருந்தால் அது உணவல்ல. எனவே, சஹர் உணவை அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப சாப்பிடுகின்றோம் என்றால் நன்றாக சாப்பிட்டாலும் கூட அது அல்லாஹ்விற்காக செய்யப்படுகின்றது. எனவேதான், பெருமானார் (ஸல்) அவர்கள் அதில் பரக்கத் இருக்கின்றது என்று கூறினார்கள். ஆனால், வெறுமனே வயிறை நிரப்புவதற்கும், நல்ல வகையான உணவை உண்பதற்கும், சுவையைப் பெறுவதற்கும் அது இருந்தால் பிறகு அது தனது நஃப்ஸிற்குரியதாகி விடும்.

பிறகு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் விளக்கம் கூறியவாறு கூறுகின்றார்கள்: எது இறைவனுக்காக அணியப்படுகின்றதோ அதுவே ஆடையாக இருக்கின்றது. அதைத் தவிர்த்து வேறு எதற்காக அணியப்பட்டாலும் அது நிர்வாணமேயாகும். பாருங்கள்! எவ்வளவு நுட்பமான முறையில் இது விளக்கிக் கூறப்பட்டுள்ளது. எதுவரை நீங்கள் இறைவனுக்காக துன்பங்களை சகித்துக் கொள்ள மாட்டீர்களோ அதுவரை நீங்கள் வசதிகளைப் பெற முடியாது. இதன் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதற்கேற்ப எவர்கள் ரமலானை தாங்கள் குண்டாவதற்கான ஒரு வழியாக ஆக்கிக் கொள்கின்றனரோ அவர்களது செயலும் பொய்யாகி விடுகின்றது.’’ அதாவது, ரமலானில் அவர்களது எடை குறைவதற்குப் பகரமாக அவர்களது எடை அதிகரித்து விடுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ‘‘எவ்வாறு குதிரைக்குக் காணம் மற்றும் ஏனைய சிறந்த உணவு கொடுக்கப்படுகின்றதோ அதுபோன்றே சிலருக்கு ரமலான் அமைகின்றது.’’ மக்கள் இந்த நாட்களில் நெய், மிட்டாய்கள் மற்றும் ஏனைய கொழுப்புச் சத்துள்ள உணவுகளை நன்றாக சாப்பிடுகின்றனர். இதனால் குதிரை நன்கு சாப்பிட்ட பிறகு தடித்து வெளியில் வருவது போன்றே இவர்களும் ரமலானுக்கு பிறகு தடித்த நிலையில் வெளியில் வருகின்றனர். இந்த விஷயமே ரமலானின் அருள்களை குறைக்கக் கூடியதாக இருக்கின்றது. (த∴ப்ஸீரே கபீர் தொகுதி 2, பக்கம் 395-396)

ஒருபுறம் சஹர் உணவு சாப்பிடுங்கள்; அதில் பரக்கத் இருக்கின்றது என்றும், நோன்பு திறங்கள்; அதில் பரக்கத் இருக்கின்றது என்றும் கட்டளையிடப் –பட்டிருக்கின்றது. மறுபுறம் சாப்பிடுவது மட்டுமே நோக்கமாக இருந்தால் பிறகு

அந்த விஷயம் அருள்களைக் குறைத்து விடுகின்றது. எனவே, நடுநிலையைப் பேணுவது அவசியமானதாகும். நன்றாக சாப்பிடுங்கள். ஆனால், நடுநிலையையும் பேண வேண்டும். பயணத்திலும் நோய்வாய்ப்பட்டிருக்கும் நிலையிலும் நோன்பு வைப்பது ஆகுமானதல்ல.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: "எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது. இப்போது பைஅத் செய்யாதவர்களில் ஒருவராகவும் அவர்களது தலைவராகவும் இருந்து வருகின்ற டாக்டர் மிர்ஸா யாகூப் பேக் சாஹிப் அவர்கள் ஒருமுறை வெளியூரிலிருந்து வந்தார்கள். அது அஸர் தொழுகையின் நேரமாக இருந்தது. அவர் நோன்பு வைத்திருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நோன்பு திறக்கும்படி வலியுறுத்திக் கூறினார்கள். மேலும், பயணத்தில் நோன்பு வைப்பது ஆகுமானதல்ல என்று கூறினார்கள். இவ்வாறே ஒருமுறை நோய்கள் பற்றிய பேச்சு வந்தது. அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள், அல்லாஹ் வழங்கியுள்ள அனுமதியிலிருந்து பலன் பெற வேண்டும் என்பதே நமது கொள்கையாகும். மார்க்கம் கடினத்தை அல்லாமல் எளிதையே கற்றுத் தருகின்றது. எவர்கள் பயணத்தில் இருப்பவரும் நோயாளியாக இருப்பவரும் நோன்பு வைக்க முடிந்தால் நோன்பு வைக்க வேண்டும் என்று கூறுகின்றார்களோ அதனை நாம் சரியானதாகக் கருதவில்லை."

இது தொடர்பாக ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இமாம் முஹிய்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் கூற்றை எடுத்துக் கூறினார்கள்: "அதாவது, அவர்கள் பயணத்திலும் நோய்வாய்ப்பட்டிருக்கும் தருணத்திலும் நோன்பு வைப்பதை ஆகுமானதாகக் கருதவில்லை. மாறாக, அவர்களது கருத்தின்படி அத்தகையை நிலைமையில் நோன்பு வைப்பவர் மீண்டும் அந்த நோன்பை நோற்க வேண்டும். இதனைக் கேட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமது கொள்கையும் இதுவேயாகும் என்று கூறினார்கள்."

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 13, பக்கம் 37)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் போது கூறினார்கள்: "என்னிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கின்றது. அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நோன்புகள் தொடர்பாக பயணிகள் மற்றும் நோயாளிகள் நோன்பு வைத்தால் அவர்கள் இறைக் கட்டளையை மீறி நடந்ததாக அவர்கள் தொடர்பான மார்க்கத் தீர்ப்பு கட்டாயம் இருக்கும் என்று அன்னார் ஃபத்வா கொடுத்துள்ளார்கள். ஆனால், மறுபுறம் அல் ஃபஸ்ல் பத்திரிகையில் உங்கள் தரப்பிலிருந்து ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. அதில் யார் ஆண்டு மாநாட்டிற்கு இங்கு (காதியானுக்கு) வருகின்றாரோ அவர் இங்கு வந்து நோன்பு நோற்கலாம் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றதே என்று கேள்வி கேட்கப்பட்டது. அதாவது, ரமலான் வந்திருந்தது. ஆண்டு மாநாடும் அதே நாட்களில் நடந்தன. ஆனால், எவர்கள் நோன்பு வைக்க வேண்டியது இருந்ததோ அவர்கள் நோன்பு வைத்திருந்தனர்."

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர்கள் இப்போது நோன்பு நோற்காமல் பிறகு நோன்பு வைப்பார்களோ அவர்கள் மீதும் எவ்வித ஆட்சேபனையும் எழாது. முதலாவதாக, நான் கூற விரும்புவது என்னுடைய எந்த ஃபத்வாவும் அல் ஃபஸ்ல் பத்திரிகையில் வெளியிடப்படவில்லை என்பதை நான் கூற விரும்புகின்றேன். எனினும், நான் அறிவிக்கின்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு ஃபத்வா அதில் வெளியிடப்பட்டிருக்கின்றது. அசல் விஷயம் என்னவென்றால் கிலாஃபத்தின் காலக்கட்டத்திற்கு முன்னுள்ள நாட்களில் இவ்வாறு நோன்பு வைப்பதை நான் தடை செய்து வந்தேன். ஏனென்றால், பயணத்தில் இருப்பவருக்கு நோன்பு வைப்பதற்கு அன்னார் அனுமதி வழங்காமல் இருந்ததை நான் பார்த்தேன். ஒருமுறை மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப் அவர்கள் ரமலானில் வெளியூரிலிருந்து காதியான் வந்தார்கள். அவர்கள் நோன்பு வைத்திருந்தார்கள். அஸர் நேரத்தில் அவர்கள் வந்த போது பயணத்தில் நோன்பு வைப்பது ஆகுமானதல்ல என்று கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரை நோன்பு திறக்க வைத்தார்கள். இது தொடர்பாக நீண்ட வாக்குவாதமும் உரையாடலும் இருந்தது.

இதைப் பற்றி ஏற்கனவே நான் கூறி விட்டேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எவருக்கும் தடுமாற்றம் ஏற்பட்டு விடக் கூடாது என்று கருதினார்கள். அதனால் அவர்கள் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் கூற்றை எடுத்துக் கூறினார்கள். அவர்களும் இதே கருத்தைத்தான் கூறியிருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "இந்த சம்பவத்தின் தாக்கம் எந்த அளவு என் மீது இருந்தது என்றால் பயணம் செய்து வருபவர்களை நோன்பு வைப்பதிலிருந்தும் நான் தடுத்து வந்தேன். தற்செயலாக இது நடந்தது. ஒரு ரமலானில் மவ்லவி அப்துல்லாஹ் சனோரி சாஹிப் அவர்கள் ரமலானை கழிப்பதற்காக இங்கு வந்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: நீங்கள் வெளியிலிருந்து வருபவர்களை நோன்பு நோற்பதிலிருந்து தடுக்கின்றீர்கள் என்று நான் கேள்விப்பட்டேன். ஆனால், இது எனது அறிவிப்பாகும். இங்கு ஒரு நபர் வந்தார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இங்கு நான் தங்க வேண்டியதுள்ளது. நான் தங்கும் நாட்களில் நான் நோன்பு நோற்கலாமா? அல்லது நோன்பு நோற்கக் கூடாதா? என்று கேட்டார். (பயணிகள் காதியான் வந்து நோன்பு வைத்தனர் என்பதைப் பற்றிய சம்பவங்களை இதற்கு முன்னர் நான் கூறியிருந்தேன்.) அவர் கேட்ட கேள்விக்குப் பதிலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஆம்! நீங்கள் நோன்பு வைக்கலாம். ஏனென்றால், காதியான் அஹ்மதிகளின் இரண்டாவது நாடாகும் என்று கூறினார்கள். மவ்லவி அப்துல்லாஹ் சனோரி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருந்தும் கூட நான் அவர்களது அறிவிப்பை மட்டும் ஏற்றுக் கொண்டு விட்டு இருந்து விடவில்லை. வேறு சில மக்களும் இது தொடர்பாக சாட்சி கூறியிருந்தனர். அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காதியானில் தங்கியிருந்த நாட்களில் நோன்பு வைப்பதற்கான அனுமதியை வழங்கியிருந்தார்கள். ஆனால், காதியானுக்கு வந்த நாளன்றும் அங்கிருந்து திரும்பிச் செல்கின்ற நாளன்றும் நோன்பு வைப்பதற்கு அன்னார் அனுமதி வழங்கியதில்லை. இதனால், எனது முந்தைய எண்ணத்தை நான் மாற்றிக் கொள்ள வேண்டியது வந்தது. பிறகு, இப்போது ரமலானின் ஆண்டு மாநாடு வரவிருக்கின்றது. எனவே, அம்மாநாட்டிற்காக வரக்கூடியவர்கள் நோன்பு வைக்க வேண்டுமா? நோன்பு வைக்கக் கூடாதா? என்ற கேள்வி எழுந்தது. அப்போது ஒரு நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் ஆண்டு மாநாடு ரமலானில் வந்தபோது நாங்களே விருந்தாளிகளுக்கு சஹர் உணவு பறிமாறினோம் என்று கூறினார். இந்த நிலைமையில் இங்கு ஆண்டு மாநாட்டிற்கு வருபவர்களுக்கு நோன்பு வைப்பதற்கு நான் அனுமதி வழங்கியிருப்பது கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஃபத்வாவே ஆகும். முன்னிருந்த ஆலிம்கள் பயணத்தில் நோன்பு வைப்பதைக் கூட ஆகுமானது என்று கூறி வந்தார்கள். இன்றைய பயணங்களை அஹ்மதி அல்லாத மவ்லவிகள் பயணமாகவே கருதுவதில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பயணத்தில் நோன்பு வைப்பதை தடுத்தார்கள். பிறகு அன்னார் கூறினார்கள்: "இங்கு காதியானுக்கு வந்து நோன்பு நோற்பது ஆகுமானது."

எனவே, நாம் அவர்களின் ஒரு கூற்றை எடுத்துக் கொண்டு மற்றொன்றை கை விட்டு விடக் கூடாது. இவ்வாறே ஒரு பட்டானைப் பற்றிய புகழ்பெற்ற ஒரு சம்பவம் உள்ளது. ஒரு பட்டான் மார்க்கச் சட்டங்களை மிகவும் பேணுபவராக இருந்தார். அவர்கள் ஃபிக்ஹா தொடர்பான நூல் ஒன்றில் தொழுகையில் தேவையில்லாத பெரிய அசைவுகளினால் தொழுகை முறிந்து விடும் என்று படித்திந்தார். இவ்வாறு ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களைப் பற்றி இதுபோன்று தொழுகையில் அவர்களுக்கு அசைவு ஏற்பட்டதாக அவர் படித்தார். படித்து விட்டு ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் தொழுகையே முறிந்து விட்டது என்று அவர் கூறினார். மேலும் குதூரியில் தொழுகையில் பெரிய அசைவுகள் ஏற்பட்டால் தொழுகை முறிந்து விடும் என்று கூறப்பட்டுள்ளது என அவர் கூறினார். இவ்வாறு பட்டான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக ஃபத்வா கொடுக்க ஆரம்பித்து விட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் பயணத்தில் நோன்பு வைக்கக் கூடாது என்று ஃபத்வா கொடுத்துள்ளாரோ அவரே தான் காதியான் அஹ்மதிகளுக்கு இரண்டாவது நாடாகும். எனவே, இங்கு அவர்கள் நோன்பு வைப்பது ஆகுமானதாகும் என்றும் கூறியுள்ளார். எனவே, வேறு சில காரணங்கள் இருந்தாலும் கூட இங்கு வருபவர்கள் நோன்பு வைப்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஃபத்வாவிற்கு ஏற்பவே அனுமதிக்கப் –பட்டிருக்கின்றது. (அல் ∴பஸ்ல் 4 ஜனவரி 1934, பக்கம் 3-4, தொகுதி 21, எண்.80)

ஓரிடத்தில் தங்கும் போது நோன்பு வைப்பது தொடர்பாக ஹஸ்ரத் ஸய்யிது முஹம்மது சர்வர் ஷா சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: நோன்புகள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். எவராவது ஓரிடத்தில் மூன்று நாட்களுக்கு அதிகமாக தங்க வேண்டியது இருந்தால் அவர் நோன்பு வைக்க வேண்டும். மூன்று நாட்களை விட குறைவாக தங்குவதாக இருந்தால் நோன்பு வைக்க வேண்டாம். காதியானில் குறைந்த நாட்கள் தங்கியிருந்தும் கூட ஒருவர் நோன்பு நோற்றால் அவர் மீண்டும் நோன்பு நோற்க வேண்டிய அவசியமில்லை. (∴பதாவா ஹஸ்ரத் ஸய்யிது முஹம்மது சர்வர் ஷா சாஹிப் ரிஜிஸ்டர் நம்பர் 5, தாருல் இ∴ப்தா ரப்வா ∴பிக்ஹுல் மஸீஹ், பக்கம் 208, பாபு ரோஸா அவ்ர் ரமஸான்) ஏனென்றால், காதியான் அஹ்மதிகளின் இரண்டாவது நாடாகும். எனவே, மூன்று நாட்களுக்கும் குறைவாக அங்கு தங்கினாலும் நோன்பு நோற்கலாம். மற்ற இடங்களில் **3** நாட்கள் தங்க வேண்டியது வந்தால் நோன்பு நோற்கலாம்.

பிறகு பயணி மற்றும் நோயாளி நோன்பு நோற்பது தொடர்பான ஒரு சம்பவம் இவ்வாறு வருகிறது. லாஹூரிலிருந்து ஷேக் முஹம்மது சட்டு சாஹிப் அவர்கள் வந்துள்ளார்கள் என்று தெரிந்து, வேறு சில சகோதரர்களும் வந்துள்ளனர் என்று தெரிந்து அவர்களைச் சந்திப்பதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது உயர்வான நல்லொழுக்கத்தின் அடிப்படையில் உலாவுவதற்காக வெளியில் வந்தார்கள். அதன் மூலம் வந்திருக்கும் மக்களையும் அவர்களால் சந்திக்க முடியும். மக்களுக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளியில் வரப்போகின்றார்கள் என்று தெரிந்து விட்டது. பல மக்கள் சிறிய பள்ளிவாயிலில் அதாவது மஸ்ஜிது முபாரக்கில் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அறையிலிருந்து வெளியே வந்ததும் குத்தாம்கள் மின்மினிப் பூச்சிகள் ஒளியைக் கண்டு ஓடுவதைப் போன்று ஹுஸூர் (அலை) அவர்களின் பக்கம் ஓடினர். ஹுஸூர் (அலை) அவர்கள் ஷேக் முஹம்மது சட்டு சாஹிபிடம் நீங்கள் நலமாக இருக்கின்றீர்களா? என்னைச் சந்திக்கும் பழைய நபர்களில்

நீங்கள் ஒருவர் என்று கூறி விட்டு ஹுஸூர் (அலை) அவர்கள் ஹகீம் முஹம்மது ஹுஸைன் குரைஷி சாஹிப் அவர்களைப் பார்த்து இவருக்கு எந்தக் கஷ்டமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது உங்களது கடமையாகும். இவரது உணவிற்கும் இவர் தங்குவதற்கும் முழுமையான ஏற்பாட்டைச் செய்யுங்கள். மியான் நஜ்முத்தீனிடம் அவர் எந்த உணவை விரும்புகின்றாரோ அதை தயார் செய்யும்படி கூறுங்கள் என்று கூறினார்கள். ஹகீம் சாஹிப் அவர்கள் மிகவும் நல்லது. இன்ஷா அல்லாஹ் அவருக்கு எந்த கஷ்டமும் இருக்காது என்று கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் அந்த விருந்தாளியிடம் நீங்கள் நோன்பு வைக்கவில்லைதானே என்று கேட்டார்கள். அதற்கு அவர் நான் நோன்பு வைத்துள்ளேன் என்று கூறினார். இந்த நபர் அஹ்மதி அல்ல. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், திருக்குர்ஆன் வழங்கியுள்ள சலுகைக்கேற்ப செயல்படுவதும் கூட தக்வா ஆகும். அது பயணிக்கும் நோன்பாளிக்கும் மற்ற நாட்களில் நோன்பு வைப்பதற்கான அனுமதியையும் சலுகையையும் வழங்கி இருக்கின்றது. எனவே, இதற்கேற்ப செயல்பட வேண்டும் என்று கூறினார்கள்.

தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பெரும்பாலான மார்க்க அறிஞர்கள் ஒருவர் பயணத்தில் அல்லது நோயாளியாக இருக்கும் போது நோன்பு வைத்தால் அது பாவமாகும் என்று கூறியிருப்பதைப் படித்துள்ளேன். ஏனென்றால், நமது நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாகும். தனது விருப்பத்திற்கேற்ப செயல்படுவது அல்ல. அல்லாஹ்வின் திருப்தி அவனுக்கு கட்டுப்படுவதில்தான் இருக்கின்றது. அவன் என்ன கட்டளையிடுகின்றானோ அதற்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். தன் தரப்பிலிருந்து தனது சுய கருத்துக்களை அதில் திணிக்கக் கூடாது. அவன் مَنْ كَانَ مِنْكُمْ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ என்றே அவன் கட்டளையிட்டுள்ளான். பயணம் இவ்வாறானதாக இருக்க வேணடும். நோய் இப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற எந்தக் கட்டுப்பாட்டையும் அவன் விதிக்கவில்லை. பயணத்தில் நிலையிலும் நோயாளியாக இருக்கும் நிலையிலும் நோன்பு வைக்கக் கூடாது. இன்றும் எனக்கு உடல் நலமில்லாமல் இருக்கின்றது. எனவே, நான் நோன்பு வைக்கவில்லை. நடப்பதன் மூலமாக நோயில் குறைவு ஏற்படுகின்றது. எனவே, நான் வெளியில் செல்வேன் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறி விட்டு அந்த விருந்தினரிடம் நீங்கள் வருவீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அந்த விருந்தாளி என்னால் வர முடியாது. நீங்கள் செல்லுங்கள் என்று கூறினார். மேலும் இந்தக் கட்டளை இருக்கத்தான் செய்கின்றது. ஆனால், பயணத்தில் எந்தக் கஷ்டமும் இல்லாமல் இருக்கும்போது பிறகு ஏன் நோன்பு வைக்கக் கூடாது? என்று பாபா சட்டு சாஹிப் அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் இது உங்களது சொந்தக் கருத்தாகும். திருக்குர்ஆன் கஷ்டம் இருப்பது, கஷ்டம் இல்லாமல் இருப்பது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. நீங்கள் மிகவும் முதிர்ந்த வயதில் இருக்கின்றீர்கள். வாழ்விற்கான எந்த உத்திரவாதமும் இல்லை. இறைவன் எந்த வழியின் மூலமாக திருப்தி அடைகின்றானோ மனிதன் அந்த வழியைக் கடைபிடிக்க வேண்டும். அதன் மூலம் ஸிராத்தே முஸ்தகீம் என்ற நேரான வழி அவனுக்கு கிடைக்க வேண்டும். அதற்கு பாபா சாஹிப் அவர்கள் உங்களிடமிருந்து சிறிது பலன் பெற வேண்டும் என்பதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன். இந்த வழி உண்மையானதாக இருந்தால் பிறகு நாம் கவனமற்ற நிலையிலேயே மரணித்து விடக்கூடாது என்று கூறினார். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், இது மிகவும் சிறந்த விஷயமாகும் என்று கூறினார்கள். பிறகு நான் சிறிது தூரம் சென்று விட்டு வருகின்றேன். நீங்கள் ஓய்வெடுங்கள் என்று கூறினார்கள். (அல் ஹகம் 31 ஜனவரி 1907, பக்கம் 14, தொகுதி 11, எண்.4)

நோயாளி மற்றும் பயணி நோன்பு வைப்பது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சபையில் பேச்சு வந்தது. அப்போது அன்னார் கூறினார்கள்: ஷேக் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் பயணியாக அல்லது நோயாளியாக இருப்பவர் ரமலானின் நாட்களில் நோன்பு வைத்தாலும் ரமலான் கழிந்த பிறகு மீண்டும் நோன்பு வைப்பது அவர் மீது கடமையாகும். ஏனென்றால், அல்லாஹ் فَمَنْ كَانَ مِنْكُمْ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ உங்களில் பயணியாகவோ நோயாளியாகவோ இருப்பவர் அவர் ரமலான் மாதத்திற்குப் பிறகு வரும் நாட்களில் நோன்பு நோற்க வேண்டும் என்று கூறியுள்ளான். **(2:185)** இதில் இறைவன் எந்த பயணி அல்லது நோயாளி பிடிவாதத்துடன் அல்லது தனது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக இதே நாட்களில் நோன்பு வைப்பாரோ அவருக்கு பிறகு நோன்பு வைக்க வேண்டிய தேவை அவருக்கு இல்லை என்று கூறவில்லை. அவர் பிறகு நோன்பு வைக்க வேண்டும் என்பது இறைவனின் தெளிவான கட்டளையாகும். எந்நிலையிலும் பிறகு வைக்க வேண்டிய நோன்புகள் அவர் மீது கடமையாகும். அவர் ரமலான் மாதத்தில் நோன்பு வைத்தால் அது அதிகப்படியான விஷயமாகும். இது அவரது உள்ளத்தின் விருப்பமாகும். இதனால் மற்ற நாட்களில் நோன்பு நோற்க வேண்டும் என்ற இறைவனின் கட்டளை அகன்று விடாது.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: எவர் பயணியாகவோ நோயாளியாகவோ இருக்கும் நிலையில் ரமலான் மாதத்தில் நோன்பு வைக்கின்றாரோ அவர் இறைவனின் தெளிவான கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருக்கின்றார். அல்லாஹ் பயணியும் நோயாளியும் நோக்க வைக்க வேண்டாம் என்று தெளிவாகக் கூறி விட்டான். நோயிலிருந்து விடுபட்டு உடல் நலம் கிடைத்த பிறகு நோன்பு நோற்க வேண்டும். பயணம் முடிந்த பிறகு அவர் நோன்பு நோற்க வேண்டும். ஏனென்றால், இரட்சிப்பு இறைவனின் அருளால்தான் கிடைக்க முடியும். தனது செயல்களின் வலிமை காட்டி ஒருவர் இரட்சிப்பைப் பெற முடியாது. இறைவன் நோய் குறைவாக இருந்தால் அல்லது அதிகமாக இருந்தால் என்று கூறவில்லை. பயணம் சிறிதாக இருந்தால் அல்லது பெரிதாக இருந்தால் என்றும் கூறவில்லை. மாறாக, இது பொதுவான கட்டளையாகும். எனவே, பயணி அல்லது நோயாளி நோன்பு வைத்தால் அவர் இறை கட்டளையை மீறி நடந்துள்ளார் என்ற ஃபத்வா கட்டாயம் அவர் தொடர்பாக கூறப்படும். (மல்.'பூஸாத் தொகுதி 9, பக்கம் 430-431; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மியான் அப்துல்லாஹ் சனோரி சாஹிப் அவர்களின் மகனான மியான் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லூதியானாவிற்கு வந்தார்கள். ரமலான் மாதமாக அது இருந்தது. நாங்கள் எல்லாரும் நோன்பு வைத்த நிலையில் லூதியானாவிற்குச் சென்றோம். ஹுஸூர் (அலை) அவர்கள் எனது தந்தையாரிடமோ அல்லது வேறு யாரிடமோ கேட்டார்கள். யாரிடம் கேட்டார்கள் என்று நினைவில் இல்லை. அதாவது இவர்கள் நோன்பு வைத்துள்ளார்களா? என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கேட்டார்கள். ஆம்! இவர்கள் நோன்பு வைத்துள்ளார்கள் என்று கூறப்பட்டது. அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் மியான் அப்துல்லாஹ் எவ்வாறு இறைவன் நோன்பு நோற்குமாறு கட்டளை –யிட்டுள்ளானோ அவ்வாறே பயணத்தின்போதும் நோன்பு வைக்கக் கூடாது என்றும் அவன் கட்டளையிட்டுள்ளான். நீங்கள் எல்லாரும் நோன்பை திறந்து விடுங்கள் என்று கூறினார்கள். ளுஹர் தொழுகைக்குப் பிறகு இவ்வாறு கூறினார்கள். பிறகு எல்லாரும் நோன்பு திறந்தார்கள். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 2, நான்காம் பாகம், பக்கம் 125, அறிவிப்பு எண்.1159)

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் இன்னோர் அறிவிப்பில் வருகின்றது. மியான் அப்துல்லாஹ் சனோரி சாஹிப் கூறுகின்றார்கள்: ஆரம்ப நாட்களில் ரமலானின் போது ஒரு விருந்தினர் வெளியூரிலிருந்து ஹுஸூர் (அலை) அவர்களிடம் வந்தார். அது நோன்பின் நாளாக இருந்தது. அப்போது பகலின் பெரும் பகுதி கழிந்திருந்தது. ஒருவேளை அஸ்ருக்குப் பிறகுள்ள நேரமாக அது இருக்கலாம். நோன்பை இப்போது திறந்து விடுங்கள் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் அவரிடம் கூறினார்கள். அதற்கு அவர் இன்னும் கொஞ்சம் நேரம்தான் இருக்கின்றது. இப்போது ஏன் நோன்பு திறக்க வேண்டும்? என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் நீங்கள் உங்களது செயலின் வலிமையால் இறைவனை திருப்திப்படுத்த விரும்புகின்றீர்களா? இறைவன் செயலின் வலிமையினால் அல்லாமல் அவனுக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடப்பதன் மூலமாகவே அவன் உங்களிடம் திருப்தி அடைகின்றான். அல்லாஹ் பயணியாக இருப்பவர் நோன்பு வைக்க வேண்டாம் என்று கூறினால் நோன்பு வைக்கக் கூடாது என்று கூறினார்கள். இதைக் கேட்ட அந்த நபர் நோன்பை திறந்தார். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பக்கம் 97, அறிவிப்பு எண்.117)

கபூர்தலாவைச் சார்ந்த முன்ஷி ஸஃபர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஒருமுறை நானும், முன்ஷி அரோடா கான் சாஹிப் அவர்களும், லூதியானாவைச் சார்ந்த முஹம்மது கான் சாஹிப் அவர்களும் ஹஸ்ரத் சாஹிபிடம் வந்தோம். அது ரமலான் மாதமாக இருந்தது. நான் நோன்பு வைத்திருந்தேன். எனது நண்பர்கள் நோன்பு வைக்கவில்லை. நாங்கள் ஹுஸூர் (அலை) அவர்களிடம் வந்த சமயத்தில் சூரியன் மறைவதற்குக் கொஞ்ச நேரம்தான் இருந்தது. அப்போது ஹஸ்ரத் சாஹிபிடம் எனது நண்பர்கள் ஸஃபர் அஹ்மது நோன்பு வைத்துள்ளார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உடனடியாக உள்ளே சென்றார்கள். சர்பத் இருந்த ஒரு டம்ளரைக் கொண்டு வந்தார்கள். பிறகு நோன்பைத் திறங்கள். பயணத்தில் நோன்பு வைக்கக் கூடாது என்று கூறினார்கள். நான் அவர்களது கட்டளையை நிறைவேற்றினேன். பிறகு அங்கு தங்கியிருந்த நாட்களில் நோன்பு வைக்க ஆரம்பித்தோம். அவ்வாறு தங்கியிருந்த சமயத்தில் ஒருநாள் ஹுஸூர் (அலை) அவர்கள் நோன்பு திறக்கம் நேரத்தில் ஒரு பெரிய தட்டில் சர்பத்தின் மூன்று பெரிய டம்ளர்களை வைத்துக் கொண்டு வந்தார்கள். அதில் இருந்ததைக் குடித்து நாங்கள் நோன்பு திறந்தோம். அப்போது நான் முன்ஷிஜி அதாவது முன்ஷி அரோடே கான் சாஹிப் அவர்களுக்கு ஒரு டம்ளர் போதுமானதாக இருக்குமா? என்று கேட்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புன்சிரிப்புடன் உடனடியாக உள்ளே சென்றார்கள். பிறகு ஒரு பெரிய பாத்திரத்தில் சர்பத்தை நிரப்பிக் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் முன்ஷி அரோடே கான் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் சாஹிபின் கைகளால் இதை அருந்துகின்றோம் என்ற மகிழ்ச்சியில் தொடர்ந்து குடித்துக் கொண்டே இருந்தார்கள். (அஸ்ஹாபே அஹ்மது தொகுதி 4, பக்கம் 224 - புதிய பதிப்பு, ஹஸ்ரத் முன்ஷி ஸ.'பர் அஹ்மது சாஹிப் அவர்களின் அறிவிப்பு) இவ்வாறு ஒரு பெரிய ஜாடியிலிருந்த சர்பத்தை முழுவதுமாக குடித்து முடித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் மவ்லா பக்ஷ் சாஹிப் பென்ஷனர் அவர்கள் மவ்லவி அப்துர்ரஹ்மான் சாஹிப் முபஷ்ஷிர் அவர்கள் மூலமாக அறிவிகின்றார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ரமலான் மாதத்தில் அமிர்தசரஸிற்கு வந்தார்கள். அப்போது அவர்களுடைய சொற்பொழிவிற்கான ஏற்பாடு மண்ட்வாபாபு என்ற இடத்தில் செய்யப்பட்டிருந்தது. பயணத்தின் காரணமாக ஹுஸூர் நோன்பு வைத்திருக்கவில்லை. ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்த நேரத்தில் மியான் ஃபஸ்லுர் ரஹ்மான்

சாஹிப் அவர்கள் தேநீரின் குவளையை ஹுஸூர் (அலை) அவர்களுக்கு கொடுத்தார்கள். ஹுஸூர் அவர்கள் அதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருந்தார்கள். பிறகு அவர் இன்னும் முன்னால் வந்தார். அப்போதும் ஹுஸூர் அவர்கள் தனது சொற்பொழிவின் பக்கமே கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்கள். பிறகு அவர்கள் அந்த குவளையை ஹுஸூர் (அலை) அவர்களுக்கு முன்னால் அருகில் கொண்டு போய் வைத்தார். அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் தேநீர் குவளையை கையில் எடுத்து தேநீரை அருந்தினார்கள். அதைப் பார்த்தபோது இதுதான் புனித ரமலானுக்கு இவர் தரும் கண்ணியமாகும்; நோன்பு வைக்காமல் இருக்கின்றார் என்று மக்கள் கூச்சலிட ஆரம்பித்தனர். ஹுஸூர் (அலை) அவர்கள் பின்னால் சென்று விட்டார்கள். வண்டி கதவுக்கு அருகில் கொண்டு வரப்பட்டது. ஹுஸூர் வண்டியில் அமர்ந்தார்கள். மக்கள் செங்கற்களையும் கற்களையும் எறிய ஆரம்பித்தனர். பெரும் கூச்சல் எழுந்தது. வண்டியின் கண்ணாடி உடைந்தது. இறுதியில் ஹுஸூர் (அலை) அவர்கள் நலமுடன் தான் தங்கிய இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். ஓர் அஹ்மதியல்லாத மவ்லவி இவற்றையெல்லாம் செய்த பிறகும் கூட இன்று மக்கள் மிர்ஸாவை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டனர் என்று கூறியதாக நான் பிறகு கேள்விப்பட்டேன். நானே இதனை அவரது நாவிலிருந்து நேரடியாகக் கேட்கவில்லை.

பிறகு தொடர்ந்து கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஹக்கீம் நூரூத்தீன் சாஹிபுடன் நாங்கள் வெளியே வந்தோம். மக்கள் செங்கற்களையும் கற்களையும் எறிகின்றனர். எனவே, சிறிது நேரம் இருந்துவிட்டு செல்லுங்கள் என்று அவர்களிடம் கூறினோம். அதற்கு அவர்கள் எவரை அவர்கள் அடிக்க நினைத்தனரோ அவர்கள் சென்றுவிட்டார்கள். இப்போது என்னை யார் அடிப்பார்? என்று கேட்டார்கள். அந்த சமயத்தில் முஃப்தி ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் தேநீர் கொடுத்ததால் இந்த எல்லா குழப்பமும் ஏற்பட்டதால் எல்லாரும் நீங்கள் ஏன் அவ்வாறு செய்தீர்கள்? என்று கேட்க ஆரம்பித்தனர். உங்களால்தான் இவையெல்லாம் நடந்தன என்று கூறினர் அறிவிப்பாளர் கூறுகின்றார். நான் அவர்களை பார்த்து இதையே கூறினேன். பிறகு மர்ஹூம் மியான் அப்துல் காலிக் சாஹிப் அவர்கள் என்னிடம் ஹுஸூர் (அலை) அவர்களது சமூகத்தில் பிறகு இந்த விவகாரம் எடுத்து வைக்கப்பட்டது. முஃப்தி சாஹிப் தேவையில்லாமல் சொற்பொழிவில் மோசமான இடையூரை ஏற்படுத்தி விட்டார்கள் என்று கூறப்பட்டது. அதை கேட்ட ஹுஸூர் (அலை) அவர்கள் முஃப்தி சாஹிப் அவர்கள் எந்த தீய செயலையும் செய்யவில்லை. பயணத்தில் நோன்பு வைக்கக் கூடாது என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். அல்லாஹ் நமது ஒரு செயல் மூலமாக இந்த கட்டளையை பரப்புவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கி விட்டான் என்று கூறினார்கள். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பதிலாக இருந்தது. இந்தப் பதிலை கேட்டு முஃப்தி சாஹிப் அவர்கள் சிங்கம் போன்று மேலும் தைரியத்துடன் செயல்பட்டார்கள் என்று எழுதுபவர்கள் எழுதுகின்றனர். (ஸீரத்துல் மஹ்தி தொகுதி 2, நான்காம் பாகம், பக்கம் 147, அறிவிப்பு எண்.1202)

நோயாளியாக ஆகி விட்டால் நோன்பை திறப்பது தொடர்பான ஒரு சம்பவத்தை பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் என்னிடம் கூறினார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருமுறை லூதியானாவில் ரமலான் மாதத்தில் நோன்பு வைத்திருந்தார்கள். திடீரென்று அவர்களுக்கு இதய நோய் ஏற்பட்டதன் காரணமாக இதய துடிப்பு குறைந்து கை கால்கள் குளிர்ந்து விட்டன. சூரியன் அஸ்தமிக்கும் நேரம் மிகவும் அருகில் வந்திருந்தும் கூட அவர்கள் உடனடியாக நோன்பை திறந்து விட்டார்கள். அவர்கள் எப்போதும் ஷரீஅத்தின் எளிதான வழியையே கடைபிடித்து வந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கூற வந்தது என்னவென்றால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஒரு நபிமொழியில் பெருமானார் (ஸல்) அவர்களை பற்றியும் இவ்வாறே குறிப்பிடப் –பட்டிருக்கின்றது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் இரண்டு ஆகுமான வழிகளில் எளிதான வழியையே விரும்பினார்கள். (ஸீரத்துல் மஹ்தி தொகுதி 1, மூன்றாவது பாகம், பக்கம் 637, அறிவிப்பு எண்.697)

சில நேரங்களில் பணிகள் அதிகமாக இருக்கின்ற அறுவடை காலங்களில் ரமலான் மாதம் வந்துவிட்டால் அந்த வேலை செய்து காலம் கழிக்கின்ற விவசாயிகளால் வேலைப்பளுவின் காரணமாக கட்டளை என்ன? என்று கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் اَلْاَعْمَالُ بِالنِّيَّاتِ செயல்கள் எண்ணங்களின் அடிப்படையிலேயே அமைகின்றன. இந்த மக்கள் தமது நிலைமையை மறைத்து வைத்துள்ளனர். ஒவ்வொரு நபரும் இறையச்சத்துடனும் தூய உள்ளத்துடனும் தனது நிலைமையை பற்றி சிந்திக்கட்டும். அவர் நோன்பு வைக்க முடிந்தால் நோன்பு வைக்கட்டும். அவ்வாறு முடியாத பட்சத்தில் நோயாளியாக இருப்பவருக்கு உள்ள கட்டளை அவருக்கும் பொருந்தும். பிறகு நோன்பு வைக்க முடியும்போது நோன்பு வைக்கட்டும் என்று கூறினார்கள். குறிப்பாக வெப்ப காலத்தில் பகல் மிக தீமையானதாக இருக்கும். அத்தகைய நாடுகளில் வெப்பமும் கடுமையாக இருக்கும். அப்படிப்பட்ட இடங்களில் உள்ளவர் தங்களது வேலைப்பளுவின் காரணமாக பிறகு நோன்பு வைத்து கொள்ளலாம். وَعَلَى الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ என்ற வசனம் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 'எவர் ஆற்றலைப் பெறாதவராக இருக்கின்றாரோ' என்றே இதற்கு பொருள் என்று கூறினார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 394; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எவர் ரமலானில் நோன்பு வைப்பதற்கான ஆற்றலை பெற முடியாமல் இருக்கின்றனரோ அவர் ஃபித்யா கொடுப்பது தொடர்பாக என்ன கட்டளை இருக்கின்றது? என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் கேட்டபோது, அவர்கள் ''ஒரு முறை எனது உள்ளத்தில் ஃபித்யா ஏன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது? என்ற எண்ணம் வந்தது. அப்போது அது நல்வாய்ப்பு கிடைப்பதற்காகத்தான் வைக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரிய வந்தது. அதன் மூலம் நோன்பு வைப்பதற்கான நல்வாய்ப்பு கிடைக்க வேண்டும். இறைவன்தான் நல்வாய்ப்பை வழங்குகின்றான். எனவே, ஒவ்வொரு பொருளையும் அவனிடமே கேட்க வேண்டும். இறைவன் எல்லாவற்றிற்கும் ஆற்றல் பெற்றவனாக இருக்கின்றான். அவன் விரும்பினால் எலும்புருக்கி நோய் இருக்கும் ஒருவருக்கு கூட ஆற்றலை வழங்க முடியும். எனவே, ஃபித்யாவின் மூலம் அந்த ஆற்றல் கிடைக்க வேண்டும் என்பதே நோக்கமாக இருக்கின்றது. அது இறைவனின் அருளால்தான் நடக்கும். எனவே, எனது பார்வையில் இவ்வாறு துஆ செய்வது சிறந்ததாகும்: இறைவா! இது உனது அருளுக்குரிய மாதமாகும். நான் இதிலிருந்தும் விலகியிருக்கின்றேன். வருகின்ற ஆண்டில் உயிருடன் இருப்பேனோ அல்லது இருக்க மாட்டேனா? விடுபட்ட நோன்புகளை என்னால் நோற்க முடியுமா? முடியாதா? என்பதைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? என்று கூறி அவனிடம் நல்வாய்ப்பை வேண்டும்போது அத்தகைய உள்ளத்திற்கு அல்லாஹ் ஆற்றலை வழங்குவான் என்று நான் உறுதியாக நம்புகின்றேன் என்று கூறினார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 258-259; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஃபித்யா கொடுப்பதன் மூலம் நோன்பு நோற்பதை விட்டு விடலாம் என்பது இல்லை. அவர் இந்த அருளுக்குரிய நாட்களில் ஷரீஅத் அனுமதித்துள்ள ஆகுமான ஏதாவதொரு காரணத்தினால் ஏனைய முஸ்லிம்களுடன் சேர்ந்து இந்த இறை வணக்கத்தைச் செய்ய முடியாமல் போனதற்கே அவர் ஃபித்யா கொடுக்கின்றார். பிறகு இந்தக் காரணம் இரு வகைப்படும். ஒன்று, தற்காலிகமான ஒரு காரணம். மற்றொன்று, நிரந்தரமான காரணம். இந்த இரு நிலைமைகளிலும் தமது சக்திக்கேற்ப ஃபித்யா கொடுக்க வேண்டும். ஒருவர் ஃபித்யா கொடுத்திருந்தாலும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குப் பிறகு அவரது உடல் நலமும் ஆரோக்கியமும் எப்போது அவருக்கு அனுமதி வழங்குகின்றதோ அப்போது அவர் நோன்பு நோற்க வேண்டும். முதலில் தற்காலிகமாக நோயாளியாக இருந்து பிறகு அவரது உடல்நலம் சரியாகி விடுகின்றது. பிறகு இன்று நோன்பு வைப்பேன். நாளை நோன்பு வைப்பேன் என்று அவர் நினைத்துக் கொண்டே இருந்து பிறகு அவரது உடல்நலம் நிரந்தரமாக மோசமாகி விட்டால் அவருக்கு மட்டும் இதில் விதிவிலக்கு உண்டு. அவர் ஃபித்யா மட்டும் கொடுக்க வேண்டும். இதைத் தவிர உணவு வழங்குவதற்கு எவருக்கு சக்தி இருக்கின்றதோ அவர் பயணியாக இருந்தாலும் நோயாளியாக இருந்தாலும் ரமலான் மாதத்தில் ஃபித்யாவாக ஓர் ஏழைக்கு அவர் உணவளிக்க வேண்டும். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கொள்கையாக இருந்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் எப்போதும் ஃபித்யாவும் கொடுத்து வந்தார்கள். பிறகு, மற்ற நாட்களில் நோன்பும் வைத்தார்கள். இதனையே மற்றவர்களுக்கும் அன்னார் வலியுறுத்திக் கூறி வந்தார்கள். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 2, பக்கம் 389) நோன்பு வைப்பதற்கான ஆற்றலைப் பெறாதவர் அதற்குப் பகரமாக ஓர் ஏழைக்கு உணவளிக்க வேண்டுமா? அல்லது அதனை யதீம் ஃபண்டில் அதாவது அநாதைகளுக்கான ஃபண்டில் அதற்கான தொகையை ஜமாஅத் அமைப்பின் ஏற்பாட்டின் கீழ் செலவிடும் வகையில் அந்தத் தொகையை காதியானுக்கு அனுப்பி வைப்பது ஆகுமானதா? இல்லையா என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், இரண்டும் ஒரே விஷயம்தான். தமது நகரிலுள்ள ஓர் ஏழைக்கு உணவாகவும் அதை வழங்கலாம் அல்லது அநாதைகளுக்கான நிதியில் அந்தத் தொகையையே காதியானுக்கு அனுப்பி வைக்கலாம்'' (மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 186; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) என்று கூறினார்கள். தனக்கு தெரிந்தவர்களுக்கு நோன்பு திறப்பதற்கான ஏற்பாட்டை அதன் மூலம் செய்யலாம்.

தான் அறியாத நிலையில் எதையாவது சாப்பிட்டாலோ குடித்தாலோ நோன்பு முறிந்து விடாது. ஒரு நபர் கடிதம் மூலமாக நான் அறைக்குள் அமர்ந்தவாறு என்னை அறியாமல் உணவு சாப்பிட்டு கொண்டே இருந்தேன். நேரம் முடிந்துவிட்டது பற்றி எனக்கு தெரியாமல் இருந்தது. வெளியில் வந்து பார்த்தபோதுதான் விடியலின் வெண்கதிர்கள் வெளிப்பட்டிருப்பதை நான் பார்த்தேன். மீண்டும் நோன்பு வைப்பது எனக்கு கட்டாயமா? என்று கேட்டார் அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் தான் அறியதாத நிலையில் ஒருவர் சாப்பிட்டு கொண்டும் குடித்து கொண்டும் இருந்தால் அந்த நோன்பிற்கு பகரமாக இன்னொரு நோன்பை வைக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல என்று கூறினார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 189; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.)

எந்த வயதில் நோன்பு வைக்க வேண்டும்? என்று குழந்தைகளும் கேட்கின்றனர். பெரியவர்களும் கேட்கின்றனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஷரீஅத் சிறு வயதில் நோன்பு வைப்பதை தடை செய்திருக்கின்றது. ஆனால், பருவை வயதிற்கு அருகில் செல்லும் தருணத்தில் பயிற்சிக்காக சில நோன்புகளை கண்டிப்பாக வைக்க வேண்டும். எனது நினைவில் இருப்பதை பொறுத்த அளவில் எனக்கு 12 அல்லது 13 வயதாகிய போதுதான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனக்கு முதலில் நோன்பு வைக்க அனுமதி தந்தார்கள். ஆனால் சில முட்டாள்கள் 6 அல்லது 7 வயது குழந்தையை

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
பதர் வாரப் பத்திரிகை காதியான்

**Vol. 1** **Thursday 7 JULY 2016** **Issue No. 18**

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

நோன்பு நோற்க வைக்கின்றார்கள். நமக்கு இதற்கான நற்கூலி கிடைக்கும் என்று அவர்கள் கருதுகின்றனர். இது நற்கூலியை பெற்று தரும் பணியல்ல. மாறாக, இது அநீதியாகும். ஏனென்றால் இது வளர்ச்சியடைகின்ற பருவமாக இருக்கின்றது. எனினும், பருவ வயதை நெருங்கும் அந்த வயதில் நோன்பு அவர்கள் மீது கடமையாக ஆகப்போகின்ற அந்த தருணத்தில் கண்டிப்பாக நோன்பு நோற்பதற்கான பயிற்சியை அவர்களுக்கு வழங்க வேண்டும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்களது அனுமதியையும் நடைமுறையையும் பார்பதாக இருந்தால் 12 அல்லது 13 வயதில் இதற்காக சிறிது பயிற்சியளிக்க வேண்டும். அதற்கு பிறகு ஒவ்வொரு வருடமும் சில நோன்புகளை வைக்கும் படி கூற வேண்டும். எதுவரையென்றால் எனது பார்வையில் 18 வயது நோன்பு நோற்பதற்கான பருவ வயதாகும். முதல் வருடத்தில் ஒரு நோன்பு வைப்பதற்கு மட்டுமே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனக்கு அனுமதி வழங்கினார்கள்.'' அதாவது 12 அல்லது 13 வயதில் ஒரு நோன்பு வையுங்கள். ''இந்த வயதில் ஆர்வம் மட்டுமே இருக்கும். குழந்தைகள் அதிகமாக நோன்பு வைப்பதற்கு விரும்புவார்கள். ஆனால் அவர்களை அதிலிருந்து தடுப்பது பெற்றோர்களின் பணியாகும். பிறகு ஒரு வயது வந்த பிறகு கண்டிப்பாக அவர்களை நோன்பு நோற்க வையுங்கள். அதாவது இளமை பருவத்தை அவர்கள் அடையும் போது அவர்களுக்கு தைரிய மூட்டி அவர்களை நோன்பு பிடிக்க வையுங்கள். ஆனால், அதிகமாக நோன்பு வைக்க விட்டுவிடாதீர்கள். அவர்களை பார்ப்பவர்கள் கூட இவர்கள் எல்லா நோன்புகளையும் ஏன் வைக்கவில்லை என்று அவர்கள் மீது ஆட்சேபனை செய்யும் வகையிலும் இருக்கக்கூடாது. சிறுவன் இந்த வயதில் எல்லா நோன்புகளையும் நோற்றால் எதிர்காலத்தில் அவனால் நோன்பு வைக்க முடியாமல் போய்விடும். சில குழந்தைகள் பிறப்பின் அடிப்படையில் மிகவும் பலகீனமாக இருக்கின்றனர். சந்திப்பின் போது சில குழந்தைகளை என்னிடம் கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு 15 வயதாகின்றது என்று கூறுகின்றனர். ஆனால் பார்ப்பதற்கு அவர்கள் 7 அல்லது 8 வயதானவர்கள் போன்றே தோன்றுகின்றது. அத்தகைய குழந்தைகள் நோன்பு வைப்பதற்கான பருவ வயதை 21 வயதில்தான் அடைவர். இதற்கு எதிரில் 15 வயது உடைய ஒரு பையன் 18 வயது உடைய பையனை போன்ற உடல் அமைப்பை கொண்டுள்ளார் எனில், நோன்பு வைப்பதற்கான பருவ வயது 18 வயது என்ற எனது சொற்களையே அவர் பிடித்து கொண்டிருந்தால் அவர் என் மீதும் அநீதி இழைக்க மாட்டார். இறைவன் மீதும் அநீதி இழைக்க மாட்டார். மாறாக தனது உயிர்மீது தானே அநீதி இழைப்பவராக அவர் இருக்கின்றார். சிறு வயதிலுள்ள குழந்தைகள் எல்லா நோன்புகளையும் வைக்காமல் இருக்கும் போது மக்கள் அதனை குத்தி காட்டி பேசினால் அவர்கள் அந்த குழந்தையின் உயிர் மீது அநீதியிழைக்கின்றவர்களாக இருக்கின்றனர்.

(த∴ப்ஸீரே கபீர் தொகுதி 2, பக்கம் 385)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூத்த மகளான நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள். '' பருவ வயதை அடைவதற்கு முன்னதாக குறைந்த வயதில் நோன்பு வைப்பதை ஹுஸூர் (அலை) அவர்கள் விரும்பியதில்லை. ஒன்றிரண்டு நோன்புகளை வைப்பதை போதுமானதாக கருதினார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்கள் முதல் முறையாக என்னை நோன்பு நோற்க வைத்தார்கள். அப்போது நோன்பு திறப்பதற்கு பெரிய விருந்திற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்கள். எல்லோரையும் அதில் அழைத்திருந்தார்கள். இந்த ரமலானுக்கு பிறகு அடுத்து இரண்டாவதகாவோ மூன்றாவதாகவோ வந்த ரமலானின் நான் மீண்டும் நோன்பு வைத்தேன். நான் மீண்டும் நோன்பு வைத்துள்ளேன் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் அறையில் அமர்ந்திருந்தார்கள். பக்கத்தில் இரண்டு வெற்றிலைகளை வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் அம்மாஜான் அவற்றை தயாரித்து வைத்திருந்தார்கள் என்று நினைக்கின்றேன். இந்த வெற்றிலையை சாப்பிடுங்கள் என்று எனக்கு அதை தந்தார்கள். நீங்கள் பலகீனமாக இருக்கின்றீர்கள். இப்போது நோன்பு வைக்க வேண்டாம் நோன்பை முறித்து விடுங்கள் என்று கூறினார்கள். நான் வெற்றிலையை சாப்பிட்டேன். ஆனால், எனது சின்ன மாமாவின் மனைவியும் நோன்பு வைத்துள்ளார்கள் என்று கூறினேன். அவர்களும் சிறு வயதில் நோன்பு வைத்திருந்தார்கள். அவரையும் நோன்பு திறக்க வைத்து விடுவோம் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். நான் அவர்களையும் அழைத்து வந்தேன். இரண்டாவது வெற்றிலையை அவரிடம் கொடுத்து நோன்பை திறக்கும்படி ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். அப்போது அநேகமாக எனக்கு பத்து வயதாகும் என்ற நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள். (தஹ்ரீராத்தே முபாரக்கா ∴பிக்ஹுல் மஸீஹ் பக்கம் 214, பாபு ரோஸா அவ்ர் ரமஸான்)

இவ்வாறே தராவீஹ் தொழுகை தொடர்பாக சில கேள்விகள் உள்ளன. அக்மல் சாஹிப் அவர்கள் எழுத்து மூலம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் புனித ரமலானில் இரவில் எழுந்து தொழுவது குறித்து வலியுறுத்தி கூறப்பட்டிருக்கின்றது. உழைக்கின்ற தொழிலாளிகள் விவசாயிகள் இந்த விஷயத்தில் கவனமற்றவர்களாக இருக்கின்றனர். இரவின் இறுதி பகுதியில் தொழுவதற்கு பதிலாக இரவின் முதல் பகுதியில் 11 ரக்அத்துகள் அவர்கள் தொழுமாறு நாம் தொழுகையை நடத்தினால் (இகாமத் செய்தால்) அது ஆகுமானதா? என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் இதில் எந்தக் குற்றமும் இல்லை. அவ்வாறு தொழுங்கள் என்று கூறினார்கள். (மல்∴பூஸாத் தொகுதி 9, பக்கம் 65; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது.)

தராவீஹ் தொழுகை தொடர்பாக இது தஹஜ்ஜுதாகவும் இருப்பதால் 20 ரக்அத்துகள் தொழுவது பற்றி உங்கள் கட்டளை என்ன? என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் நிரந்தரமான நடைமுறை 8 ரக்அத்துகள் தொழுவதேயாகும். அன்னார் தஹஜ்ஜுத் வேளையிலேயே இதனை தொழுது வந்தார்கள். இதுவே சிறந்த வழிமுறையாகும். ஆனால், இரவின் முதல் பகுதியில் அதை தொழுவதும் ஆகுமானதாகும். ஒரு அறிவிப்பில் இரவின் முதல் பகுதியில் அதை பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுததாக கூறப்பட்டிருக்கின்றது. 20 ரக்அத்துக்ள் பிறகு தொழப்பட்டதாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் நடைமுறை 8 ரக்அத்துகள் தொழுவதேயாகும் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். (மல்∴பூஸாத் தொகுதி 10, பக்கம் 113; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) தஹஜ்ஜுத் நேரத்தில் எழுந்து 8 ரக்அத்துகள் தொழுவதே பொருத்தமானதாகும்.

ஒரு நபர் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு கடிதம் எழுதி பயணத்தில் எவ்வாறு தொழ வேண்டும்? தராவீஹ் தொழுகை தொடர்பாக உங்கள் கட்டளை என்ன? என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் (அலை) கூறினார்கள். பயணத்தில் தொழுகை இரண்டு ரக்அத்துகளைக் கொண்டதாகும். தராவீஹ் உண்மையில் தஹஜ்ஜுத் தொழுகையேயாகும். அது ஒரு புதிய தொழுகையல்ல. அதுவும் சுன்னத்தாகும். சில நேரங்களில் வீட்டில் தனிமையாக இருக்கும்போது அதை தொழுது வாருங்கள் ∴பித்ர் தொழுகையை தொழுவது போன்று இதையும் தொழுது வாருங்கள் என்று கூறினார்கள். (மல்∴பூஸாத் தொகுதி 10, பக்கம் 113; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இவை ரமலான் தொடர்பாக நான் கூறியுள்ள விஷயங்களாகும். அல்லாஹ் தக்வாவில் நிலைத்திருந்து அல்லாஹ்வின் விருப்பத்திற்கு முன்னுரிமை வழங்கியவாறு ரமலானின் நோன்பிலிருந்து பயனடைவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்.

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஆனால், எவரிடம் ஷய்த்தானின் பங்கு இல்லையோ, மேலும் எவர் கீழ்த்தரமான வாழ்க்கையிலிருந்து மரணித்தவரைப் போன்று தூர விலகிச் சென்று விட்டாரோ, உண்மையாளராகவும் விசுவாமிக்கவராகவும் ஆகி விட்டாரோ, மேலும் இறைவன் பக்கம் வந்து விட்டாரோ அவர் மீது ஷய்த்தான் தாக்குதல் நடத்த முடியாது. இதைப் பற்றி அல்லாஹ் اِنَّ عِبَادِيْ لَيْسَ لَكَ عَلَيْهِمْ سُلْطٰنٌ என் அடியார்களிடத்து உனக்கு எந்த அதிகாரமும் இல்லை (15:43) என்று கூறியுள்ளான். எவர்கள் ஷய்த்தானுக்குரியவர்களாகி ஷய்த்தானிய பழக்க வழக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளனரோ அவர்களின் பக்கமே ஷய்த்தான் ஓடுகின்றான். ஏனென்றால், அவர்கள் ஷய்த்தானின் இரையாக இருக்கின்றனர்.

☆ இதற்குக் காரணம் மனித பலவீனத்தின் காரணமாக மனிதனின் இயல்பின் ஒரு கருமித்தனமும் இருக்கின்றது. ஒரு மலை அளவு தங்கம் அவனிடம் இருந்தாலும் கூட கருமித்தனத்தின் ஒரு பகுதி அவனுக்குள் இருக்கின்றது. தனது எல்லா பொருள்களையும் தனது கைகளிலிருந்து விட்டு விட அவன் விரும்பமாட்டான். ஆனால், هُدًى لِّلْمُتَّقِيْنَ (இது இறையச்சம் உடையவர்களுக்கு நேர்வழியினை வழங்குகின்றது) என்ற வசனத்திற்கு ஏற்ப கொடையாக வழங்கப்படும் ஓர் ஆற்றல் அவருடன் எப்போதும் இருக்கும் போது பிறகு அவரது உள்ளம் அவ்வாறு இறந்து விடுகின்றது என்றால், எல்லா கருமித்தனமும் ந∴ப்ஸின் எல்லா கசப்பும் அவரிடமிருந்து விலகி விடுகின்றது. அப்போது இறைவனின் விருப்பத்தைத் தேடுவது அவருக்கு ஒவ்வொரு செல்வத்தை விடவும் அதிகமாக அன்பிற்குரியதாகத் தெரிகின்றது. மேலும் அழிந்துபோகும் கருவூலங்களை பூமியில் சேகரிப்பதற்கு அவர் விரும்ப மாட்டார். மாறாக, வானத்தில் அவர் தனது செல்வத்தைச் சேகரிப்பார்.

☆ உண்மையில் முழுமையாகப் பின்பற்றுதல் என்பது அதே பண்புகளைக் கடைபிடிப்பதும் அந்த ஒளிகளே உள்ளத்தில் வந்து விடுவதுமாகும். دَخَلْتُ النَّارَ حَتّٰى صِرْتُ نَارًا நான் நெருப்பில் நுழைந்தேன். எதுவரையென்றால் நான் நெருப்பாகவே ஆகி விட்டேன் (என்ற தன்மை உருவாகி விட வேண்டும்).

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 140-142)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad